வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu — ඊළනාඩු





மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.
MoneyGram. money transfer — மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER — ரியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER — வெஸ்ரேன் யூனியன் பணப்பரிவர்த்தனை


Email : eelanaduweekly@gmail.com மலர் : 06 22.07.2025 செவ்வாய்க்கிழமை இதழ் : 202 பக்கங்கள் : 12

## மாகாண சபைத் தேர்தல் அடுத்த வருடம் நடக்கும்

### தேர்தல்கள் ஆணைக்குழு தகவல்

கொழும்பு, ஜூலை 22

**மாகாண சபைகளுக்கான தேர்தலை அடுத்த வருடம் நடத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளதாக, தேர்தல்கள் ஆணைக்குழு தரப்பு தெரிவித்துள்ளது.**

எதிர்வரும் 3 அல்லது 4 வருடங்களுக்குத் தேர்தலை நடத்துவதற்கான வாய்ப்பில்லை என, தேர்தல்கள் ஆணையாளர் சமன் சிறி ரத்நாயக்க தெரிவித்தாக கூறி, ஊடகங்களில் தகவல்கள் பகிரப்பட்டு வருகின்றன.

ஏற்கனவே, ஜனாதிபதித் தேர்தல், பொதுத் தேர்தல், உள்ளூராட்சி சபைகள் தேர்தல் நடத்தப்பட்டுள்ள நிலையில், மாகாண சபைகள் தேர்தலும் நடத்தப்படும் என்ற எதிர்பார்ப்பு நிலவுகிறது.

இந்தநிலையில், சமன் சிறி ரத்நாயக்கவின் கருத்து அரசியல் தரப்பில் கேள்விகளை எழுப்பியிருக்கிறது.

11

## அரச வருவாய் 19.95 சதவீதமாக அதிகரிப்பு

கொழும்பு, ஜூலை 22

2025 ஆம் ஆண்டின் முதல் ஐந்து மாதங்களில் அரச வருவாய் 1,942.36 பில்லியன் ரூபாயாக அதிகரித்துள்ளது.

இது கடந்த ஆண்டின் இதே காலகட்டத்தின் புள்ளிவிவரங்களுடன் ஒப்பிடுகையில் 19.95 வீத அதிகரிப்பைக் குறிக்கிறது என்று இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

2024 ஆம் ஆண்டின் முதல் ஐந்து மாதங்களில், அரச வருவாய் 1,619.23 பில்லியன்

11

## சித்துபாத்தி மனித புதைகுழியில் நேற்று மேலும் 7 எலும்புக்கூடுகள்

யாழ்ப்பாணம், ஜூலை 22

அரியாலை - சித்துபாத்தி மனிதப் புதைகுழியில் நேற்று 7 மனித எலும்புக்கூடுகள் பகுதியளவில் அடையாளம் காணப்பட்டுள்ளன.

அரியாலை சித்துபாத்தி இந்து மயான மனிதப் புதைகுழியின் இரண்டாம் கட்ட அகழ்வு பணிகள் கடந்த 10ஆம் திகதியுடன் தற்காலிகமாக நிறுத்தப்பட்டு நேற்று மீண்டும் ஆரம்பிக்கப்பட்டது.

இதன்போது தடயவியல் அகழ்வாய்வுத்தளம் ஒன்றில் 4 மனித எலும்புக்கூடுகளும் தடயவியல்

11



## அவுஸ்திரேலிய தலைநகரான கன்பராவில் செம்மணிக்கு சர்வதேச நீதி கோரி பேரணி



கன்பரா, ஜூலை 22

செம்மணி புதைகுழிகளில் இருந்து ஆதாரங்கள் மீண்டும் வெளிவந்ததைத் தொடர்ந்து, ஈழத்தில் நடந்து வரும் இனப்படுகொலைக்கு சர்வதேச பொறுப்புக் கூறலைக் கோரி, அனைத்து ஈழத் தமிழ் அவுஸ்திரேலிய அமைப்புகளும் நேற்று மதியம் 12 மணிக்கு கன்பராவில் மாபெரும் கண்டனப்

11

## ஷானியை சி.ஐ.டி பணிப்பாளராக நியமிக்கப் பேராயர் கோரவில்லை

### அருட்தந்தை சிறில் காமினி

கொழும்பு, ஜூலை 22

"உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவம் தொடர்பில் பொலிஸ் சேவையிலிருந்து நீக்கப்பட்டுள்ள பிரதி பொலிஸ்மா அதிபர் நிலந்த ஜெயவர்தனவுக்கு மரண தண்டனை வழங்கவேண்டும் என்பது கத்தோலிக்க திருச்சபையின் நிலைப்பாடில்லை." -இவ்வாறு கொழும்பு மறை மாவட்டத்துக்கான தகவல் தொடர்பு இயக்குநர் அருட்தந்தை சிறில் காமினி பெர்ணாண்டோ தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இவ்வாறு கூறினார்.

11

## குருக்கள்மடம் மனித புதைகுழி வழக்கு ஓகஸ்ட் 25 ஆம் திகதிக்கு ஒத்திவைப்பு

மட்டக்களப்பு, ஜூலை 22

குருக்கள்மடம் மனிதப் புதைகுழி தோண்டப்படல் வேண்டும் என்ற வழக்கு அடுத்த மாதம் ஓகஸ்ட் 25ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இந்த வழக்கு நேற்று திங்கட்கிழமை களுவாஞ்சிகுடி நீதவான் நீதிமள்றத்தில் மீள விசாரணைக்காக எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதன்போது இதன் கடந்த வழக்கில் காணாமற் போன ஆட்கள் பற்றிய அலுவலகம் மற்றும் சட்டமா அதிபருக்கு நேற்று திங்கட்கிழமை களுவாஞ்சிகுடி நீதிவான் நீதிமன்றத்தில் முன்னிலையாகுமாறு களுவாஞ்சிகுடி நீதிமன்றம் கட்டளை பிறப்பித்திருந்தது.

11

## யாழ்ப்பாணத்தில் அரசு சதித் திட்டம் நாளை கறுப்புக் கொடிப் போராட்டம்

### தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி அழைப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 22

நட்புறவுப் பாலம் என்ற பெயரில் நாளை புதன்கிழமை யாழ்ப்பாணத்தில் அநுர அரசின் பெரும் சதித்திட்டம் ஒன்று நிகழவுள்ளதாக எச்சரித்துள்ள தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் செயலாளர் செல்வராஜா கஜேந்திரன் அநுர அரசின் எடுபிடிகளாகச் செயல்படும் நபர்களின் இந்த வலையில் வீழாது அன்றைய நாளில் கறுப்புக் கொடி கட்டி அதற்கு எதிர்ப்பு வெளிப்படுத்த வேண்டும்



11

## வடக்கு காணிகள் விடுவிப்பு குறித்து யாழ்.செயலகத்தில் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஜூலை 22

வலிகாமம் வடக்கு காணி விடுவிப்பு தொடர்பான கலந்துரையாடல் ஒன்று நேற்று இடம்பெற்றது.

நேற்று காலை யாழ். மாவட்ட செயலகத்தில் மாவட்ட அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபன் தலைமையில் இந்த கூட்டம் நடைபெற்றது.

கலந்துரையாடலில் மேலதிக அரசாங்க அதிபர் (காணி) பா. ஜெயகரன், மயிலிட்டி மீள்குடியேற்ற



11

## நாணய நிதிய பிரதிநிதிகளுடன் ஜனாதிபதி அநுரகுமார சந்திப்பு

கொழும்பு, ஜூலை 22

சர்வதேச நாணய நிதியம் மற்றும் இலங்கைக்கு இடையிலான நீடிக்கப்பட்ட கடன் வசதி தொடர்பான எதிர்கால முன்னெடுப்புகள் குறித்து ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க மற்றும் சர்வதேச நாணய நிதிய பிரதிநிதிகளுக்கு இடையிலான சந்திப்பு நேற்று முற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்றது.

தற்போதைய அரசாங்கத்தின் கீழ் பொருளாதார ஸ்திரத்தன்மை எட்டப்பட்டுள்ளதால், அந்த வலுவான அடித்தளத்தில் பொருளாதார வளர்ச்சியை அடைவதன் மூலமும், புதிய பொருளாதார

11

## ஊசி மூலம் போதைப்பொருளை உடலில் செலுத்தியவர் மரணம்

யாழ்ப்பாணம், ஜூலை 22

யாழ்ப்பாணத்தில் ஊசி மூலம் போதைப்பொருளை உடலில் செலுத்தி வந்த இளைஞர் கடந்த சனிக்கிழமை உயிரிழந்தார்.

யாழ்ப்பாணம் - சிவலிங்கப்புளியடியை சேர்ந்த 26 வயது இளைஞரே உயிரிழந்தவராவார்.

இவர் கடந்த 5 வருடங்களாக ஊசி மூலம் போதைப் பொருளை உடலில் செலுத்தி வந்துள்ளார். இந்நிலையில், கடந்த சனிக்கிழமை மயக்கமடைந்த நிலையில் வீட்டில் காணப்பட்டுள்ளார்.

அதனையடுத்து, நண்பர்கள் அவரை

11

## டொனால்ட் ட்ரம்புக்கு ஆதரவாக வவுனியாவில் நேற்று போராட்டம்

வவுனியா, ஜூலை 22

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தமிழர் இறையாண்மையை மீட்டுத் தந்தால், 50 இலட்சம் கையெழுத்துக்களை திரட்டி நோபல் அமைதி பரிசுக்கு பரிந்துரை செய்வோம் என தமிழர் தாயக காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கம் தெரிவித்துள்ளது.

வவுனியாவில் அவர்களால் நேற்று முன்னெடுக்கப்பட்ட ஆர்பாட்டத்தின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர்கள் இவ்வாறு தெரிவித்தனர்.

மேலும் இது தொடர்பில் கருத்து தெரிவித்த


11




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லூர் கந்தன் மஹோற்சவ காளாஞ்சி கொடுக்கும் நிகழ்வு

படங்கள் ஐ. சிவசாந்தன்





யாழ்ப்பாணம், ஜூலை 22

வரலாற்று சிறப்பு மிக்க யாழ்ப்பாணம் நல்லூர் கந்த சுவாமி ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவத்தை முன்னிட்டு பந்தல்கால் நாட்டலும் காளாஞ்சி கொடுக்கும் நிகழ்வும் நேற்று காலை நடைபெற்றன.

கருவறையில் வீற்றிருக்கும் அலங்காரகந்தன், வள்ளி, தெய் வானைக்கு கிரியைகள் இடம் பெற்றன.

அதனையடுத்து காளாஞ்சி யானது மரபுரீதியான செங்குந் தர் பரம்பரையினருக்கு வழங் கப்பட்டது.

பின்னர் சுபநேரத்தில் ஆலய வெளிவீதி சுற்றுவட்ட பகுதி யில் சம்பிரதாயபூர்வமாக ஆலய பிரதம குருவினால் பந்தல்கால் நாட்டி வைக்கப்பட்டது.

மஹோற்சவ கொடிச்சீலை யினை பரம்பரையாக வரைந்து கொடுப்பவர்களுக்கான காளாஞ்சியினை கையளிப்ப தற்காக ஆலய உழவர் வண்டி மூலம் நல்லூர் பின்வீதியுடாக சென்று சட்டநாதர் வேல் முருகன் ஆலயநிர்வாகத்தின ரிடம், ஆலய பிரதம குருகள் தலைமையில் காளாஞ்சி, விஞ் ஞாபனம் கையளிக்கப்பட்டது.

நல்லூர் கந்தசுவாமி ஆலய மகோற்சவம் எதிர்வரும் 29 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது.

## வீட்டாரை மிரட்ட முயன்றவர் உடலில் தீ பற்றி உயிரிழப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 22

மதுபோதையில் வீட்டா ருடன் தர்க்கத்தில் ஈடுபட்டு , தனது உடலில் பெற்றோலை ஊற்றி தீ வைக்க போவதாக மிரட்டியபோது அந்நபரின் உடலில் தீ பற்றியதில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

நயினாதீவைச் சேர்ந்த குடும்பஸ்தர் ஒருவர் , கடந்த 17ஆம் திகதி மதுபோதையில் வீட்டுக்குச் சென்று வீட்டில் தர்க்கத்தில் ஈடுபட்டுள்ளார்.

பின்னர் வீட்டில் இருந்த பெற்றோலை தனது உடலில் ஊற்றி உயிரை மாய்க்க போவ தாக மிரட்டியுள்ளார். அப் போது எதிர்பாராத விதமாக அவரது உடலில் தீ பற்றியது.

தீயை அணைத்து அவரை மருத்துவமனையில் அனுமதித்த நிலையில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார். (அ)

## மாவை கந்தனுக்கு நாளை தேர்

யாழ்ப்பாணம், ஜூலை 22

வரலாற்று சிறப்பு மிக்க மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில் கடந்த 30ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்ப மான மகோற்சவ திருவிழா தொடர்ந்து சிறப்பாக இடம் பெற்று வருகிறது. 24ஆம் திருவிழாவான தேர் திருவிழா நாளை புதன்கிழமையும், மறு நாள் வியாழக்கிழமை ஆடி அமாவாசை தினத்தன்று தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறவுள்ளது. (அ)

## பனை சார்ந்த உற்பத்திப் பொருட்களின் கண்காட்சியும் விற்பனையும் நல்லூரில்

யாழ்ப்பாணம், ஜூலை 22

யாழ்ப்பாணம், நல்லூர், முத் திரைச்சந்தியில் அமைந்துள்ள சங்கிலியன் பூங்காவில் பனை சார் உற்பத்தி பொருட்களின் கண்காட்சியும் விற்பனையும் நிகழ்வானது "எங்கள் வாழ்விய லில் பனை" என்னும் தொனிப் பொருளில் நாளை செவ்வாய்க் கிழமை தொடக்கம் 26ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

வடக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களத்தின் ஏற்பாட்டின் கீழ் ஆண்டுதோ றும் ஜூலை 22ஆம் திகதி தொடக்கம் 28ஆம் திகதி வரை யான காலப்பகுதியானது பனை வாரமாகக் கொண்டாடப் பட்டு வருகின்றது.

பனை வளம் பெருகும் வகை யிலும் பனை சார் உற்பத்தி பொருட்களின் பலாபலன்களை வெளிப்படுத்தும் வகையிலும் அப்பொருட்களுக்கு உறுதியான சந்தைப்படுத்தலை ஏற்படுத்தி கொடுக்கும் வகையி லும் பனம் விதைகள் நடுதல், பனை சார் உற்பத்தி பொருட் களின் கண்காட்சியும் விற்பனையும், பனை சார் பொருட்களை உற்பத்தி செய்தல் தொடர்பான போட்டிகள், பாடசாலை மாணவர்களிடையே ஓவிய போட்டிகள், தாலம் சஞ்சிகை வெளியீடு, மற்றும் கலை நிகழ்வுகள் என்றவாறு வட மாகாணத்தில் அமைந் துள்ள பனை, தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கங்களின் ஒத்துழைப் புடன் பனை வாரம் கொண் டாடப்படவுள்ளது.

அந்தவகையில் நாளை செவ்வாய்க்கிழமை தொடக்கம் 26ஆம் திகதி வரை யாழ்ப்பாணம், நல்லூர், முத்திரைச்சந்தியில் அமைந் துள்ள சங்கிலியன் பூங்கா வில் பனை சார் உற்பத்தி பொருட்களின் கண்காட்சி யும் விற்பனையும் நிகழ்வா னது "எங்கள் வாழ்வியலில் பனை" என்னும் தொனிப் பொருளில் நடைபெறவுள் ளது.

தொடர்ச்சியாக ஜூலை 27ஆம் திகதி வவுனியா மாவட்டத்தின் நெடுங்கேணி பனை, தென்னை வள அபிவி ருத்தி கூட்டுறவுச்சங்கத்திலும் ஜூலை 28ஆம் திகதி முல் லைத்தீவு மாவட்ட பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச்சங்கங்களின் சமா சத்திலும் பனம் விதைகளை நடும் நிகழ்வுகள் நடைபெற வுள்ளன. (அ)

## மன்னாரில் கலந்துரையாடல்

மன்னார், ஜூலை 22

ரைட் ரூ லைப் நிறுவனத் தின் ஏற்பாட்டில் மன்னார் மாவட்ட மனித உரிமை செயற் பாட்டாளர்கள், சுயதொழில் முனைவோர் மற்றும் ஊடக வியலாளர்கள், சட்டத்தரணிக ளுக்கான சிறப்பு கலந்துரை யாடல் வாழ்வுதயம் கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

மன்னார் மாவட்டத்தில் இயங்கி வரும் மனித உரிமைகள் முதலுதவி மையத்தின் ஊடாக எதிர்வரும் காலங்களில் செய்யவிருக்கும் செயல்பாடுகள் தொடர்பில் இதன்போது கலந்துரையாடப்பட்டன.

எதிர்வரும் காலங்களில் அனைவரையும் இணைத்துக் கொண்டு சுயதொழில் மற்றும் மனித உரிமைகள் பாதுகாப்பு தொடர்பான பல விடயங்களை மேற்கொள்வதற்கான ஓர் ஆயத்த ஆலோசனை நிகழ்வாக இந்த கலந்துரையாடல் முன்னெடுக்கப்பட்டது.(எ)

## இளையோர் சுகநல கண்காட்சி, விழிப்புணர்வு பவனி தெல்லிப்பழையில்

யாழ்ப்பாணம், ஜூலை 22

தெல்லிப்பளை சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனை, யாழ்ப்பாணம் தாதிய பயிற்சிக் கல்லூரி மாணவர்கள், தாய்மார் கழகங்கள் இணைந்து நடத்திய இளையோர் சுகநல கண்காட்சி மற்றும் விழிப்புணர்வு நடை பவனிக்கும் என்பன வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாய கனின் பங்கேற்புடன் நேற்று திங்கட்கிழமை நடைபெற்றது.

தெல்லிப்பழை யூனியன் கல்லூரியின் கவிஞர் அம்பி கலையரங்கில் மேடை நிகழ்வு கள் தெல்லிப்பழை சுகாதார மருத்துவ அதிகாரி பரா.நந்த குமார் தலைமையில் நடை பெற்றது.

பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட ஆளுநர் தனது உரையில், தங்கள் கடமைக்கு மேலதிகமாக சமூகத்துக்காக பணியாற்றுபவர்கள், கடமையை மாத்திரம் செய்பவர்கள், கட மையைக்கூட செய்யாதவர்கள் என்று மூன்று வகுதியினர் இருக்கின்றனர். இதில் தெல்லிப் பழை சுகாதார மருத்துவ அதிகாரி மருத்துவர் பரா.நந்த குமார், முதலாவது வகைக்குள் அடங்குவார். அவர் தனது கட மைக்கும் அப்பால் சென்று இந்தச் சமூகத்தின் மேம்பாட் டுக்காக சிந்தித்து புத்தாக்கமாக செயல்படுகின்றார். அவரைப் போன்று இந்தச் சமூகத்துக்கு இப்போது அவசிய தேவையாக வுள்ள இவ்வாறான விடயங்களை ஏனையோரும் முன்னெடுக்க வேண்டும்.

தாய் சேய் நலம், உணவும் போசாக்கும், பாடசாலை சுகா தாரம், சுற்றுச்சூழல் - தொழில் முறை சுகாதாரம், ஆன்மீக உள நல சுகாதாரம் ஆகிய 5 தலைப் புகளின் கீழ் கண்காட்சி முன் னெடுக்கப்படுகின்றது. இது இன்றைய காலத்துக்கு அவசி யம் தேவை. பாடசாலை சிறு வர்களின் எதிர்காலம் சவாலுக் குரியதாக மாறி வருகின்றது. அந்தச் சவாலை எதிர்கொள்ள இந்த விடயங்கள் உறுதுணை யாக இருக்கும்.

அன்று வறுமையால்தான் போசாக்கின்மை எம்மிடத்தே தலைதூக்கியிருந்தது. இன்று வசதி படைத்தோரும் போசாக் கின்மையால் பாதிக்கப்பட்டி ருக்கின்றனர். அவர்களின் உணவுப் பழக்கத்தை ஆக்கிர மித்திருக்கும் துரித உணவுக ளால் இந்தப் பாதிப்பை எதிர் கொள்கின்றனர். எனவே, இன் றைய மாணவர்களுக்கு இவ்வா றான விழிப்புணர்வு கண்காட் சிகளை நடத்துவதன் மூலம் ஆரோக்கியமான உணவு பழக் கத்தை எதிர்காலத்தில் அவர்க ளிடம் விதைக்க முடியும்.

இன்றைய மாணவர்களின் மேம்பாட்டுக்காக, இளைய சமூகத்தை வழிப்படுத்துவதற் காக சுகாதாரத்துறையினர் மாத்திரமல்ல ஏனைய துறை யினரும் ஒன்றிணையவேண் டும். ஏனெனில், இன்றைய பாடசாலை மாணவர்கள் மாலை நேரங்களில் விளையாடுவதென் பது குறைவு. ஒன்றில் தனியார் கல்வி நிலையம் அல்லது கைபே சியில் என்கின்ற நிலையிலேயே அவர்களது வாழ்க்கை இருக் கின்றது. எனவே, இளையோ ரின் நலன் தொடர்பில் அதிக பொறுப்பு பெற்றோரிடமே இருக்கின்றது. பெற்றோருக்கும் ஆலோசனை வழங்கும் இவ்வா றான கண்காட்சிகள் இன்னமும் விரிவுபடுத்தப்பட வேண்டும் என்று குறிப்பிட்டார்.

இந்த நிகழ்வில் வைத்து தாய்மார் கழகங்கள் இடையில் நடத்தப்பட்ட போட்டியில் வெற்றி பெற்ற தாய்மார் கழகங் களுக்கான கேடயங்களும் வழங்கி வைக்கப்பட்டன.

உயிர்கொல்லி போதைப் பொருள் மற்றும் வீதி விபத்து களில் இருந்து மீட்டெடுக்கும் விழிப்புணர்வுக்காக நடை பவனி தெல்லிப்பழை யூனியன் கல்லூரியிலிருந்து ஆரம்பமாகி, தெல்லிப்பழை சுகாதார மருத் துவ அதிகாரி பணிமனை வரை யில் இடம்பெற்றது. அதன் பின் னர் அங்கு ஆளுநரால் கண் காட்சி ஆரம்பித்து வைக்கப் பட்டது.

இந்த நிகழ்வில், சிறப்பு விருந்தினர்களாக வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், யாழ்ப்பாணம் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரும் கலந்துகொண் டனர். அவர்களுடன் யாழ்ப்பா ணம் தாதிய பயிற்சிக் கல்லூரி யின் அதிபர், வலி. வடக்கு பிர தேச செயலாளர், பிரதேச சபை தவிசாளர், யூனியன் கல்லூரியின் அதிபர் ஆகியோரும் பங்கேற் றனர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu ஈழநாடு
22.07.2025 செவ்வாய்க்கிழமை
விசுவாவசு வருடம், ஆனி 06

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# கடிதம் எழுதுவதற்கு அப்பால்...

கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் மற்றும் அவர்களுடன் கூட்டு வைத்திருக்கும் ஏனைய கட்சிகள் ஒன்றிணைந்து சிவில் சமூகக் குழுக்களை சந்தித்து, இந்த விடயம் தொடர்பில் ஆராய்ந்திருக்கின்றனர். ஆனால், இவர்கள் அனைவரும் இணைந்து, என்ன செய்யப் போகின்றனர் என்பது தான் முக்கியமானது. இனப்படுகொலை விவகாரத்தை வலியுறுத்தி ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் ஆணையாளருக்கு கடிதம் எழுதுவதுதான் மேற்படி ஒன்றுகூடலின் முக்கியத்துவம். கடந்த கால அனுபவங்களிலிருந்து விடயங்களை நோக்குவதற்கு பதிலாக ஏதோ ஒன்றை செய்து முடித்துவிட்டால் தங்களின் பணி முடிந்து விடுகின்றது என்னும் அடிப்படையில் விடயங்களை நோக்குவதுதான் தவறானது.

யுத்தம் முடிவுற்று பதினாறு வருடங்கள் கடந்துவிட்ட நிலையிலும், கடந்த காலத்தில் மேற்கொள்ளப்பட்ட இது போன்ற செயல்பாடுகள் ஏன் எந்தவொரு குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய விளைவுகளையும் ஏற்படுத் தவில்லை – அவ்வாறாயின், முதலில் ஏன் விளைவுகள் ஏற்படவில்லை என்பது தொடர்பில் ஆராய்வதற்கான ஒன்றுகூடல்தான் அவசியம். சுயபரிசீலனையின்றி, ஒரே செயல்பாடுகளை தொடர்வது புத்திசாதுரியமானமனதா?

இந்திய பிரதமர் நரேந்திர மோடிக்கு ஏட்டிக்குப் போட்டியாக கடிதங்கள் எழுதப்பட்டன. ஆனால், அதற்கப்பால் புதுடில்லியை அணுகுவதற்காக என்ன முயற்சிகள் செய்யப்பட்டன? – பதில் இல்லை. புதுடில்லி இவர்களின் கடிதத்துக்கு என்ன பதில் வழங்கியது என்று கேட்டால் கட்சிகளால் பதிலளிக்க முடியுமா?

கடந்த பதினாறு வருடங்களாக சர்வதேச அழுத்தங்களை இலக்கு வைத்து செயல்படுவதான பிரசாரங்கள் செய்யப்பட்டன. அதிலும் யார் சரியானவர்கள் என்று தங்களுக்குள் கட்சிகளும் கட்சித் தலைவர்கள் என்ன செய்கின்றனர் என்னும் விளக்கமில்லாத தொண்டர்களும் தங்களுக்குள் முட்டிக் கொண்டனர். ஆனால், ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் ஆணையாளரோ இலங்கைக்கு வருகை தந்து, உள்நாட்டு பொறிமுறையை வலியுறுத்திச் செல்கிறார். இதன் பின்னரும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையை நோக்கி இனப்படுகொலை பற்றிப் பேசுவதால் என்ன பயனுண்டு.

ஐக்கிய நாடுகள் சபைக்கு வெளியில் பலம் பொருந்திய நாடுகளை இலக்கு வைத்து, யூதர்கள் போன்று 'லொபி' செய்ய வேண்டும் – அதனை யார் முன்னெடுப்பது? புலம்பெயர் நாடுகளில் இருப்பவர்கள் தங்களுக்குள் புதிய துரோகிகளைத் தேடிக் கொண்டிருக்கின்றனர். ஆரம்பத்தில் புலம்பெயர் சமூகம் ஆற்றல் கொண்டது, அதனால் பல விடயங்கள் முடியும் என்பதான கதைகள் உற்றுநோக்கப்பட்டன. ஆனால், அக் கதைகள் அனைத்தும் கழுதை தேய்ந்து கட்டெறும்பான கதையாகிவிட்டது. இப்போது களமும் புலமும் ஒரேமாதிரியாக இயலாமையின் அடையாளமாகவே இருக்கின்றன. களத்தில் இருப்பவர்கள் இறுதியில் பிரதேச சபையில் இனப்படுகொலை பற்றிப் பேசிக் கொண்டிருக்கின்றனர். மறுபுறம் புலம்பெயர் சூழலிலோ இறந்துவிட்ட பிரபாகரனை இறந்தவர் என்று சொல்லக்கூடாது என்னுமடிப்படையில் இரு குழுக்களாக மோதிக் கொண்டிருக்கின்றனர். இந்த நிலையில் எவ்வாறு அரசியலை முன்னெடுப்பது. இந்தப் பின்புலத்தில் நோக்கினால் கடிதம் எழுதுவதுதான் ஒப்பீட்டிப் படையில் மிகவும் இலகுவான விடயம்.

## உடற்பயிற்சியில் இளவாலை கன்னியர்மடம் 8 வருடங்களின் பின்னர் படைத்தது சாதனை

யாழ்ப்பாணம், ஜூலை 22

வட மாகாண பாடசாலைக ளுக்கு இடையிலான மாகாண மட்ட பெண்களுக்கான உடற் பயிற்சி போட்டியில் இளவாலை கன்னியர் மடம் மகா வித்தியாலய அணி 8 வருடங்களின் பின்னர் சாதனை படைத்து சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்துக் கொண்டது.




வட மாகாண பாடசாலைகளுக்கு இடையிலான மாகாண மட்ட உடற் பயிற்சிப் போட்டிகள் மட்டுவில் சந்திரபுர ஸ்கந்த வரோதய மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது.

இதில் பெண்களுக்கான போட்டியில் பல்வேறு சவால்களை கடந்த இளவாலை கன்னி யர் மடம் மகா வித்தியாலய அணி 8 வருடங்களின் பின்னர் தமது அபாரமான திறமையை வெளிப்படுத்தி சம்பியன் கிண் ணத்தையும் 2ஆம் இடத்தை புத்தூர் சோமஸ் கந்த கல்லூரி அணியும், மூன்றாம் இடத்தை கரம் பொன் சிறிய புஷ்ப மகளிர் மகா வித்தியாலய அணியும் பெற்றுக் கொண்டன.

இதில் சிறந்த விளையாட்டு வீராங்கனையாக இளவாலை கன்னியர் மடம் மகா வித்தியாலய அணி தலைவர் எல்.ஏஞ்சல் தெரிவு செய்யப்பட்டார். (அ)

## தந்தையின் சித்திரவதையால் காட்டுக்குள் ஓடிய மகள் மீட்பு

கொழும்பு, ஜூலை 22

தனது தாய் வெளிநாட்டில் இருந்தபோது, தந்தை சித்திரவதை செய்ததால் வீட்டை விட்டு காட்டுக்கு ஓடிய 14 வயது பாடசாலை மாணவியை கண்டுபிடித்துள்ளதாக ஹதரலியத்த பொலிஸார் தெரிவித்தனர்.

14 மற்றும் 8 வயதுடைய இரண்டு மகள்களும், அதே பொலிஸ் எல்லைக்குள் வரும் கஹபத்வலவின் கோனதென்ன பகுதியில் தங்கள் 36 வயதுடைய தந்தையுடன் வசித்து வந்துள்ளனர்.

தந்தையின் சித்திரவதை காரணமாக, மூத்த மகள் கடந்த 16 ஆம் திகதி காலை வீட்டை விட்டு வெளியேறி, தனது பாடசாலை பையில் தனது துணிகளை வைத்து எடுத்துச் சென்றதாக பொலிஸார் தெரிவித்தனர்.

பாடசாலைக்குச் சென்ற மகள் மாலை வரை வீடு திரும்பவில்லை என்று ஹதரலியத்த பொலிஸில் தந்தை முறைப்பாடு அளித்திருந்தார். உடனடியாக அவளைத் தேடிச் சென்ற பொலிஸார், நாள் முழுவதும் உண்ணாமல் இருந்ததால், அவள் ஒரு மரத்தடியில் படுத்து தூங்கிக் கொண்டிருந்ததைக் கண்டு மீட்டு அழைத்து வந்ததாக தெரிவித்தனர். (அ)

## இலஞ்சம், ஊழல் விசாரணை குழுவில் 2,138 முறைப்பாடுகள்

கொழும்பு, ஜூலை 22

இந்த ஆண்டு இதுவரை இலஞ்சம், ஊழல் விசாரணை ஆணைக்குழுவுக்கு 2,138 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவற்றில், 44 சோதனைகள் நடத்தப்பட்டு 31 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று இலஞ்ச, ஊழல் விசாரணை ஆணைக் குழு தெரிவித்துள்ளது.

கைது செய்யப்பட்டவர்களில் அதிபர்கள், பொலிஸ் அதிகாரிகள், தொழிலாளர், அதிகாரிகள் மற்றும் பிற அங்கீகரிக்கப்பட்ட அதிகாரிகள் அடங்குவர் என்று கூறப்பட்டது. (அ)

## முட்டையின் விலை குறைப்பு

கொழும்பு, ஜூலை 22

முட்டை விலையை 2 ரூபாயினால் குறைப்பதற்கு அகில இலங்கை முட்டை உற்பத்தியாளர்கள் சங்கம் தீர்மானித்துள்ளது.


கொழும்பில், நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற கலந்துரையாடலின் பின்னர் இந்த தீர்மானம் எட்டப்பட்டதாக இலங்கை முட்டை உற்பத்தியாளர்கள் சங்கத்தின் தலைவர் சரத் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

கோழிகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளமையே இதற்கு காரணமென அவர் குறிப்பிட்டார்.

இருப்பினும், சிறு அளவிலான முட்டை உற்பத்தியாளர்கள் தங்களது தொழிலை தொடர்ந்தும் முன்னெடுக்க முடியாத நிலையில் உள்ளதாகவும் அவர் சுட்டிக் காட்டினார்.

இந்தநிலையில், முட்டை உற்பத்தி துறையை மேம்படுத்துவதற்கும், கோழி இறக்குமதியை கட்டுப்படுத்துவதற்கும் அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென இலங்கை முட்டை உற்பத்தியாளர்கள் சங்கத்தின் தலைவர் சரத் ரத்நாயக்க கோரிக்கை விடுத்துள்ளார். (அ)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**மேடம்**
குடும்பத்தாரின் எண்ணங்களை கேட்டறிந்து பூர்த்தி செய்வீர்கள். வியாபாரத்தில் புது முதலீடு செய்வீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் ஒத்துழைப்பார்கள். அதிரடியான மாற்றம் உண்டாகும்.

**இடபம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் சில வேலைகளை உங்கள்பார்வையிலேயே முடிப்பது நல்லது. வியாபாரத்தில் வேலையாட்கள் ஒத்துழைப்பு குறையும். உங்களைப் பற்றி வதந்திகள் வரும்.

**மிதுனம்**
மறைமுக விமர்சனங்களும் எதிர்காலம் பற்றி பயம் வந்து நீங்கும். உறவினர், நண்பர்களால் சங்கடங்கள் வரும். வேலைச்சுமையால் சோர்வு அடைவீர்கள். தன்னம்பிக்கை தேவைப்படும் நாள்.

**கடகம்**
குடும்பத்தில் சுப நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வீர்கள். விலகி நின்றவர்கள் விரும்பி வருவார்கள். வியாபாரத்தில் கடமை உணர்வுடன் செயல்பட தொடங்குவீர்கள். உங்கள் கை ஓங்கும்.

**சிம்மம்**
தன்னம்பிக்கையுடன் பொதுக் காரியங்களில் ஈடுபடுவீர்கள். வியாபாரத்தில்புதுவாடிக்கையாளர்கள் வருவார்கள். உத்தியோகத்தில் அதிகாரிகளின் நம்பிக்கையை பெறுவீர்கள். மகிழ்ச்சியான நாள்.

**கன்னி**
புதிய பாதையில் பயணிக்கத் தொடங்குவீர்கள். பிள்ளைகள் குடும்ப சூழ்நிலை அறிந்து செயல்படுவார்கள். வியாபாரத்தில் நெளிவு சுளிவுகளை கற்றுக் கொள்வீர்கள். அலுவலகத்தில் மரியாதைக் கூடும்.

**துலாம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் எவ்வளவு பணம் வந்தாலும் எடுத்து வைக்க முடியவில்லை என்றெல்லாம் ஆதங்கப்படுவீர்கள். வியாபாரத்தில் வேலையாட்களிடம் போராட வேண்டியிருக்கும்.

**விருட்சிகம்**
உற்சாகமாக எதையும் முன்னின்று செய்வீர்கள். நட்பு வழியில் நல்ல செய்தி கேட்பீர்கள். உத்தியோகத்தில் அதிகாரி உங்கள் புதிய முயற்சியை பாராட்டுவார். நன்மை நடக்கும் நாள்.

**தனுசு**
எதிர்பாராத பணவரவு உண்டு. பிள்ளைகளின் பெருமைகளை மற்றவர்களிடம் சொல்லி மகிழ்வீர்கள். பழைய சிக்கலில் ஒன்று தீரும். வியாபாரத்தில் புகழ்பெற்ற புது ஒப்பந்தம் செய்வீர்கள்.

**மகரம்**
குடும்பத்தில் அடிப்படை வசதிகளை மேம்படுத்துவீர்கள். வியாபாரத்தை விரிவுபடுத்துவீர்கள். உத்தியோகத்தில் அதிகாரிகள் வலிய வந்து உதவுவார்கள். கனவு நனவாகும் நாள்.

**கும்பம்**
திட்டமிட்ட காரியங்களை சிறப்பாக முடிப்பீர்கள். தாய்வழி உறவினர்களுடன் மோதல்கள் வந்து நீங்கும். உத்தியோகத்தில் சில சூட்சுமங்களை உணர்வீர்கள். உழைப்பால் உயரும் நாள்.

**மீனம்**
சவால்கள் விவாதங்களில் வெற்றி பெறுவீர்கள். உடன்பிறந்தவர்கள் பக்கபலமாக இருப்பார்கள். சுப நிகழ்ச்சிகளில் கலந்துக் கொள்வீர்கள். தேடுவீர்கள். தைரியம் கூடும் நாள்.





# பண்மக்கள் கல்வி கூடத்தின் பரிசளிப்பு விழாவில் பரீட்சையில் சாதித்த மாணவர்களுக்கு கௌரவம்

யாழ்ப்பாணம், ஜூலை 22

யாழ்ப்பாணம், சங்கானை பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பணிப்புலம் பண்மக்கள் இலவசக் கல்வி கூடத்தின் வருடாந்த பரிசளிப்பு விழா இலவசக் கல்வி கூடத்தின் தலைவர் த. றஞ்சன் தலைமையில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இதன்போது விருந்தினர்கள் மலர்மாலை அணிவிக்கப்பட்டு பாரம்பரிய முறைப்படி வரவேற்கப்பட்டனர்.

தொடர்ந்து இலவசக்கல்வி கூட மாணவர்களின் கலை நிகழ்வுகளும் மாணவர்களின் சிந்து நடைக்கூத்தும் நடைபெற்றது.

இலவசக்கல்வி கூடத்தின் கொடையாளர்கள் கௌரவிப்பு நடைபெற்றதுடன், க. பொ. த. சாதாரண தரப்பரீட்சையில் சித்திபெற்ற மாணவர்களுக்கான கௌரவிப்பு நிகழ்வும் நடைபெற்றது.

மேலும் மாணவர்களுக்கான பரிசில்களும் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபன் பிரதம விருந்தினராக கலந்து கொண்டார். சிறப்பு விருந்தினராக சங்கானை பிரதேச செயலாளர் கவிதா உதயகுமாரும் கௌரவ விருந்தினராக யாழ்ப்பாணம் தொழில்நுட்பவியல் கல்லூரி பணிப்பாளர் ஆறுமுகம் நற்குணேஸ்வரன், வடக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர் சபா குகதாஸ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்வில் பண்மக்கள் இலவசக்கல்வி கூடத்தின் ஆசிரியர்கள், மாணவர்கள், புலம்பெயர் தேச உறவுகள், பிரதேச மக்கள் பங்கேற்றனர்.

(எ)

# நாவாந்துறையில் கோல் கம்பம் வீழ்ந்ததில் 29 வயது இளைஞன் பரிதாபமாக மரணம்!

யாழ்ப்பாணம், ஜூலை 22

நாவாந்துறை சென்மேரிஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் உதைபந்தாட்டத்தில் ஈடுபட்ட இளைஞன் ஒருவர் கோல் கம்பம் வீழ்ந்து உயிரிழந்தார்.

நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை மாலை குறித்த மைதானத்தில் உதைபந்தாட்டம் விளையாடிய இளைஞன் மீது கோல் கம்பம் வீழ்ந்தது.

இதில் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட செபஸ்தியாம்பிள்ளை யுவராஜ் (வயது -29) என்ற இளைஞன் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார். இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸார்



மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (எ)

# கசூரினா கடற்கரையில் தீ விபத்து: பெருமளவான மரங்கள் எரிந்து நாசம்

யாழ்ப்பாணம், ஜூலை 22

யாழ்ப்பாணம், காரைநகர் கசூரினா கடற்கரையை அண்மித்த பகுதிகளில் பரவிய தீ கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் இரவு 09.00 மணியளவில் காரைநகர் கசூரினா கடற்கரை மற்றும் அதனை அண்மித்த பகுதிகளில் உள்ள சவுக்கு மரங்கள், பனை மரங்கள், புற்கள் ஆகியவற்றில் தீ பரவியது.



இதனை அறிந்த பிரதேச மக்கள் பொலிஸாருக்கும் கடற்படையினருக்கும் தகவல் வழங்கியதை அடுத்து அங்கு சென்ற பொலிஸாரும் கடற்படையினரும் பிரதேச சபையினரும் பௌசர்கள் மூலம் தீயைக் கட்டுப்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டனர்.

இந்த நிலையில் நேற்று அதிகாலை 02. 00 மணியளவில் தீ கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டது. இதன்போது பெருமளவான மரங்கள் தீயால் எரிந்து நாசமாகின. தீப்பரவலுக்கான காரணம் அறியப்படவில்லை. ஊர்காவற்றுறை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (எ)

# சுன்னாகத்தில் புடைவையகத்தில் தீ: கோடிக்கணக்கான பொருட்கள் நாசம்

யாழ்ப்பாணம், ஜூலை 22

சுன்னாகம் பகுதியில் உள்ள புடைவையகத்தில் இடம்பெற்ற தீ விபத்தில் ஒரு கோடியே 25 இலட்சம் ரூபாய் பெறுமதியான பொருட்கள் தீயில் எரிந்து நாசமானதாக தெரிவிக்கப்படுகிறது.

இது குறித்து மேலும் தெரியவருகையில்,

குறித்த கடையில் வியாபாரம் நிறைவடைந்த பின்னர் பணியாளர் ஒருவர் கடையை பூட்டிவிட்டு வீடு சென்றுள்ளார். அங்கு சுவாமி படத்துக்கு ஏற்றிய தீபத்திலிருந்து தீ பற்றி கடை எரிந்து நாசமாகியது.

இது குறித்து சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டது. சுன்னாகம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (எ-05)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டை விட்டு 1,489 வைத்தியர்கள் மூன்று ஆண்டுகளில் வெளியேற்றம்

## ஆய்வில் வெளிவந்தது தகவல்

கொழும்பு, ஜூலை 22

**2022 முதல் 2024 வரையிலான மூன்று ஆண்டுகளில், நிபுணர்கள் உட்பட 1,489 வைத்தியர்கள் நாட்டை விட்டு வெளியேறியதாக சமீபத்திய ஆய்வில் தெரிவிக்கப்பட்டுள்ளது.**

நாட்டின் வரலாற்றில் மிக மோசமான பொருளாதார நெருக்கடி ஏற்பட்டது இதற்கு காரணமாக இருக்கலாம் என தெரிவிக்கப்படுகிறது.

அதிக எண்ணிக்கையிலான வைத்தியர்கள் நாட்டை விட்டு வெளியேறுவது சுகாதார உட்கட்டமைப்பை சீர்குலைத்து, நிபுணர்களின் பற்றாக்குறையை உருவாக்கியுள்ளது.

குறிப்பாக கிராமப்புற மற்றும் பின்தங்கிய பகுதிகள் பெரும்பாலும் பாதிப்படைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

முதுகலை கல்விக்காக வெளிநாடு செல்லும்போது வைத்தியர்களை மீண்டும் பணிக்கு அழைக்க கிடைக்கக்கூடிய பயிற்சிக்குப் பிந்தைய சேவை பத்திரங்கள் பெரும்பாலும் பயனற்றவை என்பதையும் ஆய்வு வெளிப்படுத்தியுள்ளது.

நாட்டின் சுகாதாரப் பணியாளர்களில் தற்போது 23,000 வைத்தியர்கள் இருப்பதாகவும், அவர்களில் 2,800 பேர் நிபுணர்கள் என்றும் ஆய்வில் தெரியவந்துள்ளது.

ஆய்வுக்காக பெறப்பட்ட தரவுகளின்படி, 2022 முதல் 2024 வரையிலான மூன்று ஆண்டுகளில் 1085 வைத்தியர்கள் வெளிநாடுகளில் சிறப்புப் பயிற்சி பெற்று வருகின்றனர், இதில் 2022 ஆம் ஆண்டில் 477 வைத்தியர்கள் வெளிநாடுகளுக்குச் சென்றுள்ளனர்.

2023 ஆம் ஆண்டில் 449 வைத்தியர்கள் வெளிநாடுகளுக்குச் சென்றுள்ளனர். இந்த ஆய்வில் சிறப்புப் பயிற்சி பெறும் 1085 வைத்தியர்களில் 20 சதவீதம் பேர், முதுகலை சான்றிதழ்களைப் பெற்ற பிறகும் நாடு திரும்பவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

சுகாதார அமைச்சிலிருந்து பெறப்பட்ட தரவுகளின்படி, 3,839 வைத்திய பட்டதாரிகள் மற்றும் 75 பயிற்சியாளர்கள் மூன்று ஆண்டுகளில் பிந்தைய பயிற்சி நியமனங்களுக்கு விண்ணப்பிக்கவில்லை என்றும் ஆய்வில் தெரியவந்துள்ளது. (அ)

# கடலுக்கு செல்லாதீர்கள்!

கொழும்பு, ஜூலை 22

நாட்டில் நிலவும் சீரற்ற கால நிலையால் அடுத்த 24 மணி நேரத்துக்கு கடல் பகுதிகளுக்குள் செல்லவேண்டாம் என்று கடற்படை மற்றும் மீனவ சமூகங்களுக்கு வானிலை ஆய்வுத் துறை எச்சரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பில் வானிலை ஆய்வு மையம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளதாவது-

சிலாபத்திலிருந்து புத்தளம் வழியாக மன்னார் வரையிலும், காலியிலிருந்து அம்பாந்தோட்டை வழியாக பொத்துவில் வரையிலும் உள்ள கடற்கரையோரக் கடல் பகுதிகள் சில நேரங்களில் கொந்தளிப்பாகவோ அல்லது மிகவும் கொந்தளிப்பாகவோ இருக்கும்.

எனவே, அடுத்த 24 மணி நேரத்திற்கு இந்தக் கடல் பகுதிகளுக்குள் செல்லவேண்டாம் என்று கடற்படை மற்றும் மீனவ சமூகங்கள் அறிவுறுத்தப்படுகின்றன.

சிலாபத்திலிருந்து கொழும்பு வழியாக காலி வரையிலும், மன்னாரிலிருந்து காங்கேசன்துறை மற்றும் திருகோணமலை வழியாக வாகரை வரையிலும் உள்ள கடற்கரைப் பகுதிகள் சில நேரங்களில் கொந்தளிப்பாக இருக்கலாம்.

புத்தளம் முதல் கொழும்பு, காலி மற்றும் அம்பாந்தோட்டை வழியாக பொத்துவில் வரையிலான கடற்கரைப் பகுதிகளில் அலைகளின் உயரம் சுமார் 2.5-3.0 மீற்றர் வரை அதிகரிக்கக்கூடும்.

எனவே, புத்தளம் முதல் கொழும்பு, காலி மற்றும் அம்பாந்தோட்டை வழியாக பொத்துவில் வரையிலான கடற்கரை பகுதிகளில் அலைகள் எழும்ப வாய்ப்புள்ளது என்று வானிலை ஆய்வு மையம் எச்சரிக்கை விடுத்துள்ளது. (அ)

# சிகிரியா மோதலில் ஒருவர் உயிரிழப்பு!

கொழும்பு, ஜூலை 22

சிகிரியா பொலிஸ் பிரிவிலுள்ள தேக்கு மரத் தோட்டம் ஒன்றில் இருவருக்கிடையே ஏற்பட்ட வாய்த்தர்க்கம் கைகலப்பாகியதில் ஒருவர் உயிரிழந்ததுடன் மற்றொருவர் காயமடைந்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மேற்படி தேக்குமரங்கள் அடர்ந்த பிரதேசத்தில் கொட்டில் ஒன்றை அமைத்து சிலர் வேலை செய்து கொண்டிருந்துள்ளனர். அவர்கள் அதே கொட்டிலில் இரவு வேளையில் தங்கி இருந்துள்ளனர். அதன்போதே மேற்படி கைகலப்பு ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சம்பவத்தில் உயிரிழந்தவர் பொல்பித்திகம பிரதேசத்தைச் சேர்ந்த 55 வயதுடைய கிருஷ்ணன் ராஜ் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தம்புள்ள, இனாமலுவ பிரதேசத்திலுள்ள அரசுக்கு சொந்தமான மேற்படி தேக்குமரக்காட்டில் உள்ள மரங்களை ஒப்பந்த அடிப்படையில் அகற்றும் பணியில் ஈடுபட்ட இருவரே இவ்வாறு கைகலப்பில் ஈடுபட்டுள்ளதாக மேலும் தெரிவிக்கப்படுகிறது.

அதே கொட்டிலில் காயமடைந்த நிலையில் இருந்த மற்றும் ஒருவர் சந்தேகத்தில் கைது செய்யப்பட்டு சிகிச்சைக்காக தம்புள்ளை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (அ)

# ரோஹித அபேகுணவர்தனவின் மகளும் கணவரும் தலைமறைவு

கொழும்பு, ஜூலை 22

முன்னாள் அமைச்சர் ரோஹித அபேகுணவர்தனவின் மகள் மெலனி அபேகுணவர்த்தன மற்றும் அவரது கணவரை கைது செய்ய பாணந்துறை வலான ஊழல் தடுப்பு பிரிவு நடவடிக்கை எடுத்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

சட்டவிரோதமாக இறக்குமதி செய்யப்பட்ட 40 மில்லியன் ரூபாவுக்கும் அதிகமான மதிப்புள்ள லாண்ட் குரூசர் ஜீப்பை பாராளுமன்ற உறுப்பினர் ஜகத் விதானவின் மகனுக்கு விற்னை செய்த குற்றச்சாட்டின் பேரில் இந்த கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி களுத்துறையில் உள்ள ரோஹித அபேகுணவர்தனவின் மகளுக்குச் சொந்தமான வீட்டை பொலிஸார் சோதனை செய்துள்ளதாக கொழும்பு ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

எனினும், அவர்கள் ஏற்கனவே வீட்டை விட்டு வெளியேறி தலைமறைவாகியுள்ளதாகவும், அவர்களின் கையடக்கத் தொலைபேசியின் தொடர்பு துண்டிக்கப்பட்டிருந்ததாகவும் கூறப்படுகிறது.

மத்துகம நகரில் பாணந்துறை வலான ஊழல் தடுப்பு பிரிவின் அதிகாரிகளால் சட்டவிரோதமாக ஒன்று சேர்க்கப்பட்ட ஜீப்பை பயன்படுத்திய குற்றச்சாட்டின் பேரில், பாராளுமன்ற உறுப்பினர் ஜகத் விதானவின் மகன் ஜீப்புடன் கைது செய்யப்பட்டார்.

அதன்படி, நடத்தப்பட்ட விசாரணைகளில், ரோஹித அபேகுணவர்தனவின் மகள் மெலனியால், ஜீப் சட்டவிரோதமாக இறக்குமதி செய்யப்பட்டு, போலி எண்களைப் பயன்படுத்தி மோட்டார் வாகன பதிவுத் துறையில் பதிவு செய்யப்பட்டமை தெரியவந்தது.

இந்த ஜீப் வாகனம் ரோஹித அபேகுணவர்தனவின் மகளால் 2024 ஆம் ஆண்டு 10 ஆம் மாதத்தில் பாராளுமன்ற உறுப்பினர் ஜகத் விதானவின் மகனுக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

மேலும், இந்த ஜீப் வாகனம் சுங்க வரி செலுத்தாமல் சட்டவிரோதமாக இறக்குமதி செய்யப்பட்டதாக விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இந்த சம்பவத்தில் கைது செய்யப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஜகத் விதானவின் மகன் மத்துகம நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட பின்னர் ஒகஸ்ட் 01 வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (அ)

# அஸ்வெசும மேன்முறையீட்டுக்கான கால அவகாசம் நேற்றுடன் நிறைவு

கொழும்பு, ஜூலை 22

அஸ்வெசும நலன்புரிக் கொடுப்பனவு திட்டத்துக்காக மேன்முறையீடு செய்வதற்காக வழங்கப்பட்டிருந்த காலஅவகாசம் நேற்றுடன் நிறைவடைந்துள்ளதாக நலன்புரி நன்மைகள் சபை தெரிவித்துள்ளது.

அஸ்வெசும இரண்டாம் கட்டத்துக்கு சுமார் 30,000 விண்ணப்பங்கள் பெறப்பட்டுள்ளது டன் இது தொடர்புடைய மேல்முறையீடுகள் மற்றும் பொது மக்களின் ஆட்சேபனைகளை பிரதேச செயலகங்களில் சமர்ப்பிக்கலாம் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

கிடைக்கப்பெறும் மேன்முறையீடுகள் நலன்புரி நன்மை சபைக்கு அனுப்பப்படுவதோடு பயனாளர்களை தெரிவு செய்து நலன்புரிக் கொடுப்பனவு வழங்குவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என நலன்புரி நன்மைகள் சபை தெரிவித்தது. (அ)

# அம்பாந்தோட்டையில் மீண்டும் தொடங்கியது உப்பு உற்பத்தி!

கொழும்பு, ஜூலை 22

18 மாதங்களுக்குப் பிறகு லங்கா உப்பு நிறுவனம் அம்பாந்தோட்டையில் உப்பு உற்பத்தியை மீண்டும் தொடங்கியுள்ளது.

இந்த முறை எதிர்பார்க்கப்படும் உப்பு உற்பத்தி 40,000 மெற்றிக் தொன் என்று லங்கா உப்பு நிறுவனத்தின் தலைவர் டி. நந்தன திலக கூறுகியுள்ளார்.

வானிலை காரணமாக 18 மாதங்களுக்கு முன்பு அம்பாந்தோட்டையில் உப்பு உற்பத்தியை நிறுத்த நிறுவனம் நடவடிக்கை எடுத்திருந்தது.

அதனை தொடர்ந்து, நேற்றுக் காலை உப்பு உற்பத்தி மீண்டும் தொடங்கியுள்ளது. கடந்த ஆண்டு ஒரு இலட்சம் மெட்ரிக் தொன் உப்பு எதிர்பார்க்கப்பட்ட போதிலும், 40,000 மெற்றிக் தொன் உப்பு மட்டுமே பெறப்பட்டது.

அம்பாந்தோட்டை மகாலேவாவிலும் இன்று உப்பு அறுவடை தொடங்குமென அவர் மேலும் தெரிவித்துள்ளார். (அ)

# மைத்திரி, ரணில், கோட்டாவை நீதிமன்றத்தில் முன்நிறுத்துங்கள்

## கத்தோலிக்க திருச்சபை கோரிக்கை

கொழும்பு, ஜூலை 22

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பாக முன்னாள் ஜனாதிபதிகள் மைத்திரிபால சிறிசேன, ரணில் விக்கிரமசிங்க மற்றும் கோட்டபாய ராஜபக்ஷ ஆகியோரை நீதிமன்றத்தில் நிறுத்த வேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

தேசிய கத்தோலிக்க மக்கள் தொடர்பு பணிப்பாளர் அருட்தந்தை ஜூட் கிருஷாந்த இதனை தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பாக குற்றவாளிகளாகக் கண்டறியப்பட்ட எவரும் அவர்களின் பதவியைப் பொருட்படுத்தாமல் தண்டிக்கப்படவேண்டும் என்று அவர் வலியுறுத்தினார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பாக கடமை தவறிய குற்றச்சாட்டுகள் தொடர்பாக புலனாய்வுச் சேவையின் முன்னாள் இயக்குநர் நிலந்த ஜயவர்தனவை சேவையிலிருந்து நீக்கியதற்காக அவர் ஜனாதிபதிக்கு நன்றி தெரிவித்தார்.

"ஈஸ்டர் தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்கள் ஆறு ஆண்டுகளாக முன்வைத்து வரும் இந்தக் கோரிக்கையை நிறைவேற்றுமாறு ஜனாதிபதி, பொலிஸ்மா அதிபர் மற்றும் சி.ஐ.டியின் இயக்குநரிடம் நாங்கள் வேண்டுகோள் விடுக்கிறோம்.

அப்போதுதான் எதிர்காலத்தில் மக்கள் நியாயமாகவும் நியாயமாகவும் வாழக்கூடிய ஒரு நாடு கட்டியெழுப்பப்படும்." என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்வி சீர்திருத்தம் மாணவர்கள் மீதான சுமையை அதிகரிக்கும்!

கொழும்பு, ஜூலை 22

2026 ஆம் ஆண்டில் ஆரம் பிக்கப்படவுள்ள கல்வி சீர்தி ருத்தங்கள் மாணவர்கள் மீதான சுமையை மேலும் அதிகரிக்கும் என்று இலங்கை ஆசிரியர் சங் கத்தின் பொதுச்செயலாளர் ஜோசப் ஸ்டாலின் கூறியுள்ளார்.

தற்போதைய கல்வி முறை மாணவர்களுக்கு மிகவும் சுமை யாகியுள்ளமையால், அனைத்து கல்விசார் தொழிற்சங்கங்களும் தொடர்ந்து சீர்திருத்தங்களுக்கு அழைப்பு விடுத்து வருகின்றன.

எனினும், உண்மையான மாற்றத்திற்குப் பதிலாக, அர சாங்கம் பழைய கொள்கை களை மீண்டும் தொகுத்து புதிய சீர்திருத்தங்களாக முன்வைப் பதாக ஸ்டாலின் சுட்டிக் காட்டியுள்ளார்.

இந்த நிலையில், மாற்றங்க ளைச் செயற்படுத்துவதற்கு முன் னர் கல்வி நிபுணர்கள் மற்றும் ஆசிரியர் சங்கங்கள் போன்ற தொடர்புடைய பங்குதாரர்க ளுடன் கலந்தாலோசிக்க அர சாங்கம் தவறியுள்ளதாகவும் அவர் கூறினார்.

பாடசாலை நேரத்தை மதி யம் 1:30 முதல் மதியம் 2 மணி வரை நீடிக்கும் தீர்மானம் எந்த வித ஆலோசனையும் இல்லா மல் எடுக்கப்பட்டுள்ளது என்று அவர் சுட்டிக்காட்டினார்.

தற்போது முன்மொழியப் பட்ட சீர்திருத்தங்கள் முதலில் ரணில் விக்கிரமசிங்க நிர்வாகத் தின் கீழ் அறிமுகப் படுத்தப்பட் டதாகவும், அப்போது அவை நிராகரிக்கப்பட்டதாகவும் இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச்செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்தார். (அ)

# ஆடை , இறப்பர் ஆலைகளை பாதுகாக்க அரசு நடவடிக்கை

## அமைச்சர் சமந்த வித்தியாரத்ன

கொழும்பு, ஜூலை 22

அமெரிக்காவின் தீர்வை வரி அதிகரிப்பால் ஆடை மற்றும் இறப்பர் தொழிற்சாலைகள் வீழ்ச்சியடையாமல் பாதுகாக்க தேவையான நடவடிக்கைகளை அரசாங்கம் எடுக்கும் என பெருந் தோட்ட மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சர் சமந்த வித்தியாரத்ன தெரிவித்தார்.

பெருந்தோட்ட அமைச்சில் இடம்பெற்ற விசேட செய்தியா ளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கை யில்-அமெரிக்காவின் வரி அதி கரிப்பால் அமெரிக்காவுக்கு பிரதானமாக ஏற்றுமதி செய் யும் ஆடை மற்றும் இறப்பர் உற்பத்திகளுக்கு ஓரளவேனும் பாதிப்பு ஏற்படும் என நாங்கள் நம்புகிறோம்.

என்றாலும் ஏற்க னவே 44 வீதமாக அதிகரிக்கப் பட்ட வரி வரியை 30 வீதமாக குறைத்துக்கொள்ள எங்களுக்கு முடியுமாகியுள்ளபோதும் அது போதுமானதல்ல. அதனால் இந்த வரி அதிகரிப்பை மேலும் குறைத்துக்கொள்ள தேவை யான பேச்சுவார்த்தைகளை நாங்கள் ஆரம்பித்திருக்கிறோம்.

நாட்டின் இறப்பர் உற்பத்தியில் நூற்றுக்கு மூன் றில் ஒரு பகுதியை அமெரிக்கா வுக்கே ஏற்றுமதி செய்கிறோம். அதனால் எங்களுக்கு வருடத் துக்கு 330 மில்லியன் டொலர் வருமானம் கிடைக்கிறது. இந்த வரி அதிகரிப்பால் இந்த வரு மானத்தில் சற்று பாதிப்பு ஏற் படும். என்றாலும் இந்த பாதிப்பை கட்டுப்படுத்திக்கொள்ள நாங் கள் பல்வேறு வழிகளில் நடவ டிக்கைகளை மேற்கொண்டு வருகிறோம். அமெரிக்காவுக்கு தாய்லாந்து, இந்தோனேசியா போன்ற நாடுகளும் இறப்பர் ஏற்றுமதி செய்து வருகின்றன.

ஆனால் அமெரிக்காவின் வரி விதிப்பில் இந்த இரண்டு நாடுகளையும் விட எமக்கு குறைவாகும்.

அதனால் இந்த சந்தர்ப்பத் தில் எமது பொருட்க ளுக்கு பாதிப்பு ஏற்படாது. ஆனால் எங்களுக்கு விதிக்கப் பட்டுள்ள 30 வீத வரியைவிட வியட்னாம் போன்ற நாடுகளுக்கு குறை வாகவே வரிவிதிக் கப்பட்டி ருக்கிறது. அவ்வாறான சந்தர்ப் பங்களில் எங்களுக்கு பாதிப்பு ஏற்பட வாய்ப்பு இருக் கிறது-என்றார். (அ)

# நீரில் மூழ்கிய இரு மீனவர்கள்!

## ஒருவரின் சடலம் மீட்பு!!

கொழும்பு, ஜூலை 22

உடவளவை பனஹறுவ ஏரி யில் மீன்பிடிக்கச் சென்ற இரு வர் நீரில் மூழ்கிய நிலை யில் ஒருவரின் சடலம் மீட்கப்பட் டுள்ளது.

உடவளவை பனஹறுவ ஏரி யில் டியூப் ஒன்றின் உதவியுடன் இரண்டு நபர்கள் மீன்பிடிக்கச் சென்றுள்ள நிலையிலேயே இவ்வாறு நீரில் மூழ்கிக் காணா மல் போயுள்ளனர்.

இதேவேளை, பனஹறுவ பகுதியைச் சேர்ந்த 30 மற்றும் 29 வயதுடைய இரண்டு இளை ஞர்களே இவ்வாறு நீரில் மூழ்கி காணாமல் போயுள்ளதாக தெரி விக்கப்படுகிறது.

மீன்பிடிக்கச் சென்ற இரண்டு இளைஞர்களும் நீரில் மூழ்கு வதை அவதானித்த நபர் ஒருவர் இது தொடர்பில் பொலிஸாருக்கு தகவல் வழங் கியதை அடுத்து எம்பிலிப்பிட் டிய பொலிஸ் நிலைய உயிர் காக்கும் பிரிவு மற்றும் இராணு வத்தின் நீச்சல் வீரர்கள் விரைந்து இருவரையும் தேடும் பணியை ஆரம்பித்த நிலையில், ஒருவரின் உடல் கண்டுபிடிக்கப்பட்டது.

# பழிவாங்கலை மட்டுமே செய்கின்றது அநுர அரசு!

## சாடுகின்றார் நாமல் ராஜபக்ஷ

கொழும்பு, ஜூலை 22

தமது இயலாமையை மூடிமறைப்பதற்காகவே தேசிய மக் கள் சக்தி அரசாங்கம் பழிவாங்கும் படத்தை ஆரம்பித்துள்ளது என்று பொதுன பெரமுன கட்சியின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.



இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு-

நாட்டின் தற்போதைய அரசியல் நிலை பற்றி கதைப்ப தற்கு ஒன்றுமில்லை.

மக்களின் பிரச்னைகள் மூடி மறைக்கப்ப டுகின்றன.

பழிவாங்கும் நடவடிக் கையை மட்டுமே அரசாங் கம் முன்னெடுக்கின்றது. மறுபு றத்தில் தமது இயலாமையை மூடிமறைப்பதற்காக அரச அதி காரிகள் உட்பட மக்கள் வரை ஒடுக்கப்படுகின்றனர்.

அரிசி மாபியாக்களுக்கு முடிவு கட்டப்படும் எனக்கூ றியே தேசிய மக்கள் சக்தியினர் ஆட்சிக்கு வந்தனர்.

ஆனால் வெளிநாட்டிலி ருந்து அரிசி இறக்குமதி செய் யப்படுகின்றது. இதுகூட விவ சாயிகளை பழி வாங்கும் நட வடிக்கையாகும்.

கண்காட் சிகள் நடத்துவ தன்மூலம் மக்களின் பிரச் னையை தீர்க்க முடியாது-என் றார். (அ)

# தூய உணவு எது? தூய குடிதண்ணீர் எது? தெளிவான விளக்கம் மக்களுக்கு தேவை!

## உணவு, சுகாதார கட்டுப்பாட்டு அதிகாரி

கொழும்பு, ஜூலை 22

இலங்கையைப் பொறுத்த வரை தூய உணவு என்பது பாரிய சவாலாக உள்ளது. இன் னும் சில காலத்தில் உணவுகள் இல்லை என்ற கூறுமளவுக்கு கலப்படமும் மாற்றமும் எற்பட லாம் என சுகாதார அமைச்சின் உணவு சுகாதார கட்டுப்பாட்டு அதிகாரி சுப்ரமணியம் சுதர் ஷன் தெரிவித்தார்.

கட்டுகாஸ் தோட்டை மகா வலி ரீச் ஹோட்டலில் ஊடக அமைச்சினால் ஒழுங்கு செய் யப்பட்ட உணவு பாதுகாப்பு தொடர்பாக ஊடக வியலாளர் களைத் தெளிவுபடுத்தும் செய லமர்வில் விசேட பேச்சாளரா கக் கலந்து உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கை யில்-உலகிலுள்ள அனைத்து உயிரினங்களும் உயிர் வாழ்வ தற்கு உணவு என்பது முக்கிய மான ஒன்று, அதனை தூய்மை யானதாகப் பெற்றுக் கொண் டால் மட்டுமே அவ் உயிரினம் நீடிக்க முடியும்.

மனிதனைப் பொறுத்தவரை தூய உணவு, தூய குடிநீர் என் பன இன்றியமையாதது. இயற் கையுடன் ஒன்றி வாழும் மனித னுக்கு இயற்கைக்கு இசைவான உணவு உட்கொள்ளாத பட்சத் தில் அது பல்வேறு உடல் உபாதைகளை ஏற்படுத்தும்.

இன்று தூய உணவு, தூய குடிதண்ணீர் என்ற இரு விட யங்கள் தொடர்பாக மிகத் தெளிவான விளக்கம் தேவைப் படுகிறது. போதிய விளக்கமின்மை காரணமாக அநேகர் போலிக ளைக் கண்டு ஏமாற்றமடைகின் றனர். இது எதிர் காலத்தில் பலத்த சவாலை மனித இனம் எதிர்கொள்வதாக அமைந்து விடும்.

எனவே ஊடகவியலாளர் கள் தூய உணவு தொடர்பாக பொது மக்களை தெளிவுபடுத்த வேண்டும். அந்த அடிப்படை யிலே சுகாதார அமைச்சு ஊடக வியலாளர்களுக்கு இவ்வாறான செயலமர்வுகளை நடத்தி வருகிறது.

இன்று உணவு வகைகளில் இரசாயனங்களும், பீடைகளும், பாரிய மாற்றங்களை ஏற்படுத்தி உள்ளன.

சுவையூட்டிகள், நிறமூட்டி கள் மற்றும் அவற்றை பொதி யிடல், களஞ்சியப்படுத் தல், சந்தைப்படுத்தல் போன்ற பல செயற்பாடுகளில் உணவு மாச டைதல் ஏற்படுகிறது.

உணவு தயாரிப்பவர்க ளையோ, வர்த்தகர்களையோ, சந்தைப்படுத்துவோரையோ குறை கூறுவதை விட பொது மக்களாகிய நாம் அவ்வாறான உணவுகளை அல்லது அவற்றை விற்பனை செய்யும் நிறுவனங் களை புறக்கணிப்பதன் ஊடாக உணவை மாசடையச் செய்யும் செயற்பாட்டை தவிர்க்க முடி யும்-என்றார். (அ)

# யானைகளின் மரணங்கள் குறித்து சிறப்பு விசாரணை நடத்தப்படும்!

## சுற்றுச் சூழல் அமைச்சு கூறுகிறது

கொழும்பு, ஜூலை 22

நாட்டில் காட்டுயானைக ளின் மரணங்கள் அதிகரித்து வரும் நிலையில் குறித்த விட யம் தொடர்பில் சிறப்பு விசா ரணை நடத்தப்படும் என சுற் றுச்சூழல் அமைச்சு அறிவித்துள்ளது.

குறிப்பாக அண்மைக்கால மாக வனப்பகுதிகளுக்கு (காப்பகங்களுக்கு) வெளியே நடைபெறும் காட்டு யானை களின் மரணங்கள் அதிகரித்து வருவதாகத் தெரிவிக்கப்பட்டு கின்றது.

இந்நிலையில் குறித்த விட யம் தொடர்பில் குற்றப் புல னாய்வுத் துறையின் உதவியு டன் சிறப்பு விசாரணை நடத் தப்படும் என சுற்றுச்சூழல் அமைச்சர் தம்மிக்க பட்ட பெண்டி தெரிவித்தார்

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்-கடந்த காலங் களில் பதிவான பெருமபாலான யானைகளின் உயிரிழப்புகள் காப்பகங்களுக்கு வெளியே நிகழ்ந்துள்ளன. இது ஒரு சோக மான மற்றும் கவலைக்கிட மான சூழ்நிலை. அதனால்தான் நாங்கள் இந்த விசாரணையை முன்னெடுக்க தீர்மானித்துள் ளோம்.

அத்துடன் காட்டு யானை களை பாதுகாக்கும் நடவடிக் கைகள் மேலும் வலுப்படுத் தப்படும். குற்றவாளிகளை கண்டறிந்து சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்-என்றார். (அ)

# தவறிவிழுந்த காதலனைக் காப்பாற்ற கால்வாய்க்குள் குதித்த யுவதி மாயம்!

கொழும்பு, ஜூலை 22

மகியங்கனை, கணுவ பகு தியில் வியானா கால்வாயிக்குள் தவறி விழுந்த காதலனை காப் பாற்றச் சென்ற காதலி நீரில் மூழ்கி மாயமான சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள் ளது.

குறித்த சம்பவம் நேற்று முன் தினம் மாலை 5 மணி யளவில் இடம்பெற்றதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கால்வாயில் நீர் ஓட்டம் அதிகரித்து காணப்பட்ட நிலையில், குறித்த இருவரும் கால்வாய் ஓரமாக நடந்துச் சென்றுள்ளனர் எனவும் அப் போது குறித்த இளைஞன் எதிர்பாராத விதமாக கால்வாயிக்குள் திடீரென தவறி விழுந்துள்ளார் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

அந்த நேரத்தில், அவரது காதலி அவரைக் காப்பாற்ற முயற்சித்தவேளை அவரும் கால்வாய்க்குள் விழுந்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்நிலையில் அப்பகுதி ஊடாக சென்ற தம்பதியினர் விரைந்து செயற்பட்டு கால் வாய்க்குள் குதித்து இளைஞ னைக் காப்பாற்றியுள்ளனர் எனவும், ஆனால் அவர்களால் யுவதியை கண்டுபிடிக்க முடிய வில்லை எனவும் தெரிவிக்கப்ப டுகின்றது.

ரஜரட்ட பல்கலைக்கழ கத்தைச் சேர்ந்த 26 வயது மாணவியே இவ்வாறு நீரில் மூழ்கி காணாமல் போயுள்ளார் எனத் தெரிய வந்துள்ளது.

அம்பாந்தோட்டை பகுதியைச் சேர்ந்த குறித்த இளைஞர் பல்கலைக்கழகத்தில் இருந்து மாணவியை அழைத் துக்கொண்டு அவரது வீட்டில் இறக்கிவிடுவதற்காகச் சென்ற வேளையிலேயே இந்த விபத்து நேர்ந்துள்ளதாகத் தெரிவிக்கப் பட்டுள்ளது. (அ

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# அரசின் பயணம் தவறெனில் மக்கள் கிளர்ந்தெழுவார்கள்!

## சுட்டிக்காட்டுகிறார் மைத்திரிபால



கொழும்பு, ஜுலை 22

**"தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் பயணம் தவறெனில், அதற்கு எதிராக மக்கள் கிளர்ந்தெழுவார்கள்."- என்று முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.**

நிகழ்வொன்றின் பின்னர் ஊடகங்களிடம் கருத்து வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு-தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் ஆட்சிக்கு வந்து எட்டு மாதங்களே கடந்துள்ளன. எனவே, அரசாங்கத்தின் பயணம் சரியா அல்லது தவறா என்பதை ஒன்றரை வருடங்கள் சென்ற பின்னரே அறியக்கூடியதாக - உணரக்கூடியதாக இருக்கும்.

பயணம் சரியெனில் மக்கள் தொடர்ந்து ஆதரவு வழங்குவார்கள். தவறான பயணமெனில் மக்கள் எதிர்ப்பை வெளியிடுவார்கள்.

நாட்டில் இன்னமும் உரிய மாற்றம் இடம்பெறவில்லை என்றே நானும் கருதுகின்றேன். பொருட்களின் விலை அதிகமாக உள்ளது. மக்களுக்கு வாழ்வதற்கு கஷ்டமாக உள்ளது.

அதேவேளை, கல்வி மறுசீரமைப்பு தொடர்பில் உரிய மதிப்பாய்வின் பின்னரே அது பற்றி கருத்து வெளியிட முடியும்-என்றார். (அ)

# மகிந்தானந்த,நளினுக்கு எதிராக புதிய வழக்கு!

கொழும்பு, ஜுலை 22

சிறைத்தண்டனை அனுபவித்து வரும் முன்னாள் அமைச்சர்களான மகிந்தானந்த அளுத்கமகே, நளின் பெர்னாண்டோ மற்றும் முன்னாள் விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் நந்த மல்லவாராச்சி ஆகியோருக்கு எதிராக நேற்று கொழும்பு மேல் நீதிமன்றத்தில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

கடந்த 2014 ஆம் ஆண்டு நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலின்போது, சதொச ஊடாக 14000 கரம் மற்றும் டாம் பல கைகளை கொள்வனவு செய்து அரசியல் ஆதாயம் பெறும் நோக்கில் விளையாட்டுச் சங்கங்களுக்கு விநியோகித்ததன் மூலம் பொது சொத்துச் சட்டத்தின் கீழ் குற்றம் செய்ததாக் கூறி இந்த குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது.

குற்றப் பத்திரிகையைத் தொடர்ந்து, கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி மஞ்சுள திலகரத்ன மூன்று பிரதிவாதிகளையும் பிணையில் விடுவிக்க உத்தரவிட்டுள்ளார்.

எனினும், அவர்களுக்கு ஏற்கனவே உள்ள சிறைத்தண்டனைகள் காரணமாக, மகிந்தானந்த அளுத்கமகே மற்றும் நளின் பெர்னாண்டோ ஆகியோரை அடுத்த திட்டமிடப்பட்ட விசாரணை நாளில் நீதிமன்றத்தில் முன்னிலைப் படுத்துமாறும் நீதிபதி உத்தரவிட்டார். (அ)

# போலி கடவுச்சீட்டுடன் ஈரானிய பிரஜை கைது

கொழும்பு, ஜுலை 22

போலியான பிரித்தானிய கடவுச்சீட்டைப் பயன்படுத்தி ஜப்பான் மற்றும் துருக்கி வழியாக ஐரோப்பாவிற்கு பயணிக்க முயன்ற ஈரானிய பிரஜை ஒருவர் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்தின் எல்லை கண்காணிப்புப் பிரி வின் அதிகாரிகள் குழுவினால் கைது செய்யப்பட்ட சந்தேக நபர், விமான நிலைய குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

சந்தேகத்திற்குரிய ஈரானிய நாட்டவர் ஜப்பானில் உள்ள நரிட்டா விமான நிலையம் நோக்கி புறப்படுவதற்காக கட்டுநாயக்க விமான நிலையத்துக்கு வந்திருந்தார். அவர் வழங்கிய பிரித்தானிய கடவுச்சீட்டில் சந்தேகம் ஏற்பட்டதை தொடர்ந்து, முன்னெடுக்கப்பட்ட சோதனையில் அது போலியானது என்பது தெரியவந்தது.

சந்தேக நபரின் பொருட்களைச் சோதனைக்கு உட்படுத்தியபோது, அவரது உண்மையான ஈரானிய கடவுச்சீட்டு கண்டுபிடிக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது. (அ)

# 10000 வெளிநாட்டு சிகரெட்டுகளுடன் ஒருவர் கைது!

கொழும்பு, ஜுலை 22

பண்டாரநாயக்க, கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் வருகை முனையத்தில் வெளிநாட்டு சிகரெட்டுகளை சட்டவிரோதமாக கடத்த முயற்பட்ட ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவரிடமிருந்து 50 அட்டைப் பெட்டிகளில் மொத்தம் 10 ஆயிரம் வெளிநாட்டுத் தயாரிப்பு சிகரெட்டுகளை அதிகாரிகள் பறிமுதல் செய்துள்ளனர்.

விமான நிலையத்தின் பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்பு பணியகத்தின் அதிகாரிகளுக்கு கிடைத்த இரகசியத் தகவலுக்கு அமைவாக நேற்றுக் காலை மேற்கொண்ட சோதனையின் போது சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைதான சந்தேக நபர் வவுனியா பகுதியைச் சேர்ந்த 22 வயதுடையவர் ஆவார்.

சம்பவம் தொடர்பாக பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்புப் பணியகத்தின் விமான நிலையப் பிரிவு அதிகாரிகள் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ)

# கண்டி அழகுக்கலை நிலையத்தில் திடீரென மயங்கி வீழ்ந்த பெண்கள்!

கொழும்பு, ஜுலை 22

கண்டி, பேராதனை வீதியிலுள்ள 2 மாடிக் கட்டடமொன்றில் அமைந்துள்ள அழகுக்கலை நிலையமொன்றினுள் இருந்த சிலர் திடீரென மயக்கமடைந்ததையடுத்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நேற்று முன் தினம் பிற்பகல் இந்த சம்பவம் நேர்ந்துள்ளதாகத் தெரியவந்துள்ளது.

முதலில், அருகிலுள்ள வர்த்தக நிலையத்தைச் சேர்ந்த ஒருவர், குறித்த அழகுக்கலை நிலையத்தின் வரவேற்பறைக்கு முன்பாக பெண் ஒருவர் மயக்கமடைந்து கிடப்பதை அவதானித்துள்ளார்.

பின்னர் கதவைத் திறந்து உள்ளே சென்று பார்த்தபோது, அங்கு மேலும் 6 இளம் பெண்களும் ஒரு ஆணும் மயக்கமடைந்து கிடந்துள்ளனர்.

இதனைத் தொடர்ந்து, பொலிஸாருக்குத் தகவல் அளிக்கப்பட்டதையடுத்து, மயக்கமடைந்திருந்த குழுவினரை மருத்துவமனையில் அனுமதிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது.

அவர்களில் 6 பேர் கண்டி தேசிய மருத்துவமனையிலும், மேலும் இருவர் கண்டியிலுள்ள ஒரு தனியார் மருத்துவமனையிலும் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

அவர்களில் நால்வர் குறித்த அழகுக்கலை நிலையத்தின் பணியாளர்கள் எனவும், ஏனையோர் சேவை பெற வந்தவர்கள் எனவும் தெரியவந்துள்ளது.

அழகுக்கலை நிலையம் அமைந்துள்ள பகுதியில் நேற்று முன் தினம் பிற்பகல் வேளையில் மின்தடை ஏற்பட்டுள்ளது.

இதனையடுத்து, அழகு நிலையத்திலிருந்த மின் பிறப்பாக்கியை பயன்படுத்தி மின்சாரம் பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அதன்போது, மின்பிறப்பாக்கியிலிருந்து வெளியேறிய நச்சுப்புகை வளி சீராக்கி ஊடாக, அழகுக்கலை நிலையத்துக்கு ஊடுருவியதால் அங்கிருந்தவர்கள் மயக்கமடைந்திருக்கலாம் என பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

இந்தநிலையில், மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளவர்கள் இயல்பு நிலைக்குத் திரும்பி வருவதாக மருத்துவமனை தகவல்கள் தெரிவித்தன. (அ)

# பஸ் விபத்தில் 21 பேர் காயம்

கொழும்பு, ஜுலை 22

இலங்கை போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ்ஸும் தனியார் பஸ்ஸும் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளன.

கேகாலை, கலிகமுவ பகுதியில் நேற்று அதிகாலை 5 மணியளவில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

வெரகொடவில் இருந்து கேகாலை நோக்கி பயணித்த இலங்கை போக்குவரத்துச் சபை பஸ்ஸும், கேகாலையில் இருந்து இரத்தினபுரி நோக்கி பயணித்த தனியார் பஸ் ஒன்றுமே இவ்வாறு நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானதாக பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்தில் 21 பேர் காயமடைந்துள்ளதாகவும், இவர்கள் அனைவரும் கேகாலை மற்றும் வரகாபொல வைத்தியசாலைகளில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# ஆறு வயதுக்குட்பட்ட சிறுவர்களை கைபேசி கையாள அனுமதிக்காதீர்!

கொழும்பு, ஜுலை 22

ஆறு வயதுக்குட்பட்ட சிறுவர் மற்றும் சிறுமியர் கைபேசிகளைக் கையாளுவதற்குப் பெற்றோர் அனுமதிக்கக் கூடாது என மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சர் சரோஜா சாவித்திரி போல்ராஜ் வலியுறுத்தியுள்ளார்.

விஹாரமகா தேவி பூங்காவில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றின் போதே, அவர் இந்த விடயத்தை வலியுறுத்தினார்.

கைபேசி பயன்பாடு இளம் பராயத்தினர் மீது ஏற்படுத்தும் எதிர்மறையான தாக்கத்தை அவர் இதன்போது எடுத்துரைத்தார்.

அத்துடன், ஆரம்ப வயதுகளில் திரை செயற்பாட்டை விட, கற்றல், சமூக தொடர்பு மற்றும் விளையாட்டில் அதிக கவனம் செலுத்த வேண்டும் என்றும் மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சர் சரோஜா சாவித்திரி போல்ராஜ் கோரியுள்ளார். (அ)

# களியாட்ட விடுதியில் துப்பாக்கிச் சூடு நடத்த சென்றவர் துப்பாக்கியை கைவிட்டு தப்பினார்

கொழும்பு, ஜுலை 22

கொழும்பு, கொள்ளுப்பிட்டியில் இரவு நேர களியாட்ட விடுதி ஒன்றில் கடந்த சனிக்கிழமை இரவு துப்பாக்கிப் பிரயோக முயற்சி முறியடிக்கப்பட்டது.

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பாரத லக்ஷ்மன் பிரேமச்சந்திர கொலை வழக்கில் தற்போது மரண தண்டனை அனுபவித்து வரும் "தெமட்டகொடை சமிந்த"வின் சகோதரர் தெமட்டகொடை ருவனை இலக்கு வைத்து இந்த துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட இருந்ததாக தெரியவந்துள்ளது.

சமிந்த பல்வேறு குற்றச் செயல்களில் ஈடுபட்டதாக சந்தேகிக்கப்படுகிறது. இரவு நேர விடுதிக்கு அடிக்கடி சென்று வரும் தெமட்டகொடை ருவான் சம்பவத்தன்று வழக்கத்துக்கு மாறாக சற்று தாமதமாக சென்றுள்ளார்.

இந்நிலையில், துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொள்ள சென்றவர் ருவான் வருகை தந்துள்ளாரா என தெரிந்து கொள்ள விடுதியின் வளாகத்திற்குள் நுழைய முயன்றுள்ளார்.

இதன்போது, சந்தேக நபருக்கும் விடுதியின் நுழைவாயிலில் இருந்த பாதுகாப்பு காவலருக்கும் இடையே தகராறு ஏற்பட்டுள்ளது.

பின்னர், துப்பாக்கிப் பிரயோகத்தை நடத்த வந்தவர் தான் வைத்திருந்த ரி-56 துப்பாக்கியை சம்பவ இடத்திலேயே கைவிட்டுவிட்டு தனது சகாவுடன் தப்பிச் சென்றுள்ளார்.

இதன்போது, துப்பாக்கி மற்றும் அவர்கள் வருகை தந்த மோட்டார் சைக்கிள் இரண்டையும் கைவிட்டுவிட்டு அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளார். இந்நிலையில், துப்பாக்கியும் மோட்டார் சைக்கிளும் பொலிஸாரினால் கைப்பற்றப்பட்டுள்ளன.

இந்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகள் மேல் மாகாண வடக்கு குற்றப்பிரிவின் உதவி பொலிஸ் பரிசோதகர் ரோஹன் ஒலுகலவின் தலைமையில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்களின் காணிகளை விடுவிக்க அரசு அக்கறையுடன் செயல்படும்

## திருமலையில் பிரதி அமைச்சர் அருண் உறுதி



**திருகோணமலை, ஜூலை 22**

**திருகோணமலை மாவட்டத்தில் மக்களின் குடியிருப்பு காணிகளை உரியவாறு அடையாளம் கண்டு, அவற்றை விடுவிக்க புதிய அரசாங்கம் அக்கறையுடன் செயல்படும் என்று வெளிவிவகார மற்றும் வெளிநாட்டு வேலை வாய்ப்புகள் பிரதி அமைச்சர் அருண் ஹேமச்சந்திர உறுதியளித்தார்.**

2024 ஆம் ஆண்டு ஐந்தாம் தரப் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த, கிழக்கு மாகாண துறைமுக ஊழியர்களின் பிள்ளைகளுக்கு புலமைப் பரிசில் மானியம் மற்றும் பரிசுகள் வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் சீனக்குடா துறைமுக அதிகார சபை மண்டபத்தில் நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"அபிவிருத்தித் திட்டங்கள் என்பன மக்களோடு பின்னிப்பிணைந்த ஒரு செயல்பாடாகும். மக்கள் எதிர்ப்புத் தெரிவிக்கின்ற அபிவிருத்தித் திட்டங்களால் எதனையும் சாதித்து விட முடியாது.

இலங்கை துறைமுக அதிகார சபை என பேசும் போதெல்லாம், அங்கு மக்கள் மத்தியில் இயல்பாக எழும் ஒரு விடயம் தான் காணிப் பிரச்னை.

திருகோணமலை மாவட்டத்தில் துறைமுக அதிகார சபை தொடர்பான காணிகள், மக்கள் குடியிருப்பு காணிகள் தொடர்பாகவும் பல்வேறுபட்ட முரண்பாடுகள், தெளிவின்மை, விரிசல்கள் சமூகத்தில் நிலவுகின்றன. எனவே, ஒரு குறுகிய காலத்துக்குள் இந்த மக்கள் எதிர்நோக்குகின்ற காணிப் பிரச்னைகளுக்கு நிச்சயம் தீர்வு காண முடியும் என நம்புகிறேன்.

இந்தக் காணிகள் தொடர்பில் ஏற்கனவே, எடுக்கப்பட்ட சில தீர்மானங்கள் மற்றும் நீதிமன்ற தீர்ப்புகளின் பிரகாரம் சில விடயங்கள் நடைபெற்றுக் கொண்டு வருகின்றன. இதில் எங்களுக்கு மாற்றுக் கருத்து ஏதுமில்லை. ஏனெனில், சட்ட வரம்புக்கு உட்பட்ட விடயங்களை செய்ய வேண்டியிருக்கின்றது. இல்லையேல், நாங்கள், நீதிமன்றத்தை அவமதித்த குற்றச்சாட்டுக்கு ஆளாகிவிடுவோம்.

கடந்த காலங்களில் ஜனாதிபதி நிதியம் என்ற விடயம் ஒரு சவாலான ஒன்றாகவே காணப்பட்டது. ஜனாதிபதி நிதியத்தின் மூலம் நாட்டின் அனைத்து மாவட்டங்களில் இருந்தும், மாணவர்கள் நன்மை அடையக் கூடிய புதிய வேலைத்திட்டம் ஒன்று இந்த மாத இறுதியில் நடைமுறைக்கு வரவுள்ளது.

இதன் மூலம், ஒவ்வொரு மாவட்டத்திலிருந்தும் உயர் தரத்தில் புதிதாக மறுசீரமைக்கப்பட்ட கல்வி திட்டத்தின் கீழ், ஐந்து துறைகளில் ஏதாவது ஒரு துறையில் சிறப்பாக சித்தியடைந்த பத்து மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டு அவர்களுக்கு தலா ஒரு இலட்சம் ரூபாய் புலமைப் பரிசில் வழங்கப்படவுள்ளது.

கடந்த காலங்களில் இந்த நாடு, அரசியல் கலாசாரங்களின் மூலமாகவே சீரழிக்கப்பட்டிருக்கின்றது. பாதாள உலக கோஷ்டிகள், திட்டமிட்டு குற்றவியலுக்காக செயல்படுகின்ற கும்பல்கள் என்று எதை எடுத்துக் கொண்டாலும் அதற்குப் பின்னால் ஓர் அரசியல் பலம் இருந்திருப்பதை யாரும் மறுக்க முடியாது.

பாலாறும் தேனாறும் ஓடிக் கொண்டிருக்கின்ற நாட்டை நாங்கள் பொறுப்பெடுக்கவில்லை. உடைந்து சின்னாபின்னமாக்கப்பட்ட ஒரு நாட்டையே எங்களிடம் ஒப்படைத்திருக்கிறார்கள். தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் மிகவும் குறுகிய காலத்தில் கவிழும் என்று எல்லோரும் எதிர்பார்த்தார்கள். இதற்காக கூட்டணிகள் அமைத்தும் இறுதியில் அவர்கள் ஏமாந்து போனார்கள்."- என்றார்.

(எ)

# பொலிஸார் சிரமதானம்

கல்முனை, ஜூலை 22

கிளீன் சிறீலங்கா வேலைத் திட்டத்துடன் இணைந்ததாக பாரிய சிரமதானம் கல்முனை பிராந்திய உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் காரியாலயத்தில் நேற்று முன்னெடுக்கப்பட்டது.

இந்த சிரமதான முன்னெடுப்பானது அம்பாறை மாவட்டம் கல்முனை பிராந்திய உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் பிரிவுக்குட்பட்ட கல்முனை தலைமையக பொலிஸ், பெரிய நீலாவணை பொலிஸ், சவளக்கடை மத்திய முகாம், சம்மாந்துறை பொலிஸ் நிலைய பொலிஸாரின் ஒத்துழைப்புடன் ஆரம்பமானது

கல்முனை பிராந்திய உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் இப்னு அசார் நெறிப்படுத்தலில் சமூகப் பொலிஸ் பிரிவின் பொறுப்பதிகாரியும் பிரதம பொலிஸ் பரிசோதகர் ஏ. வாஹிட் தலைமையில் இந்த சிரமதானப் பணி நடைபெற்றது.

இதன்போது பொலிஸ் நிலையங்களின் சுற்றுச் சூழல் பிரிவு, சமூகப் பொலிஸ் பிரிவு, சிறுவர் - மகளிர் விசாரணைப் பிரிவு என்பன பங்கேற்றன.

சுற்றுச்சூழலை பாதுகாக்கும் நோக்குடனும் டெங்கு நோய்த் தாக்கத்தை இப்பிரதேசத்தில் கட்டுப்படுத்தும் முகமாகவும் அப்பகுதிகளில் உள்ள குப்பை கூழங்கள், காடுமண்டிய இடங்கள் யாவும் துப்புரவு செய்யப்பட்டன. இதன்போது வீதியோரங்களில் தேங்கிக் காணப்பட்ட கழிவுகளை பொலிஸார் அகற்றி சுத்தப்படுத்தி சூழலை அழகுபடுத்தியமை குறிப்பிடத்தக்கது.



# கலைகளை மேடையேற்றிய நாட்டார் கலை நயம் விழா

சம்மாந்துறை, ஜூலை 22

கிழக்கு மாகாண மக்களின் நாட்டாரியல் கலைகளை டிஜிற்றல் மயப்படுத்தும் செயல்திட்டத்துக்கமைய இம்மக்களின் வாழ்வியலை பிரதிபலிக்கும் நாட்டார் மற்றும் பாரம்பரிய கலை வடிவங்களை மேடையில் கொண்டாடும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்ட "நாட்டார் கலை நயம்" என்ற சிறப்பு நிகழ்வு கடந்த சனிக்கிழமை சம்மாந்துறை அல்-மர்ஜான் முஸ்லிம் மகளிர் கல்லூரியில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில், கிழக்குப் பிராந்தியத்தின் பாரம்பரிய பண்பாட்டு முறைமைகளை பிரதிபலிக்கும் விதத்தில் "நாட்டார் கலை நயம்" நிகழ்வுகள் அரங்கேற்றப்பட்டதுடன் கலைகள் தொடர்பில் தொகுக்கப்பட்ட டிஜிற்றல் ஆவண தொகுப்புகளும் காண்பிக்கப்பட்டன. (எ-01)

# ஆடி அமாவாசை திருவிழாவில் மாணவர்களின் இசை நிகழ்வு



திருக்கோவில், ஜூலை 22

வரலாற்று பிரசித்தி பெற்ற திருக்கோவில் சித்திர வேலாயுத சுவாமி ஆலயத்தின் வருடாந்த ஆடி அமாவாசை திருவிழாவில் சிறப்பு இசை நிகழ்வு நடைபெற்றது.

திருக்கோவில் வலயக்கல்வி பணிப்பாளர் இரா. உதயகுமாரின் ஒழுங்கமைப்பில் கலாசார உத்தியோகத்தர், சங்கீத ஆசிரியர்களின் ஏற்பாட்டில் 500 மாணவர்கள் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர்.

இதன்போது, கந்த சஷ்டி கவசம் மற்றும் திருப்புகழ் பாராயணம் செய்தனர்.

திருக்கோவிலில் தினமும் பகல் - இரவு திருவிழாக்கள் நடைபெற்று வருகின்றன.

இதேவேளை, நாளை மறுதினம் 24 ஆம் திகதி வியாழக்கிழமை சமுத்திர தீர்த்தோற்சவம் நடைபெறும்என ஆலய பரிபாலன சபையின் தலைவர் சுந்தரலிங்கம் சுரேஸ் தெரிவித்தார். (எ-98)

# கிண்ணியாவில் திடீர் சோதனை 2 உணவகங்களுக்கு எதிராக வழக்கு

கிண்ணியா, ஜூலை 22

திருகோணமலை, கிண்ணியா சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் உணவகங்களில் சுகாதார வைத்திய அதிகாரிகளால் திடீர் சோதனை ஒன்று நேற்று முன்தினம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

உணவகங்களின் தரத்தைப் பேணும் வகையிலும் மக்களுக்கு சுகாதாரமான உணவு கிடைக்க வேண்டுமெனும் நோக்கிலும் தொடர்ச்சியாக கிண்ணியா பிரதேசத்திலுள்ள உணவகங்களில் பரிசோதனை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

கிண்ணியா சுகாதார வைத்திய அதிகாரி எம்.அஜீத் தலைமையில் மேற்பார்வை பொதுச் சுகாதாரப் பரிசோதகர் நசுருதீனி வழிகாட்டலின் கீழ் கிண்ணியா சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தின் பொதுச் சுகாதார பரிசோதர்களால் நேற்று முன்தினம் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது.

இதன்போது உணவு பாதுகாப்பு தொடர்பில் ஆலோசனை வழங்கப்பட்டதுடன் மனித நுகர்வுக்கு பொருத்தமற்றதும் காலாவதியானதுமான உணவுப் பொருட்களை விற்பனைக்கு வெளிக்காட்டி வைத்த 2 உணவங்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. (எ)

# பொத்துவிலில் கடலில் மூழ்கிய இளைஞர்கள் இருவர் மீட்பு

பொத்துவில், ஜூலை 22

அம்பாறை, பொத்துவில் உல்ல கடலில் மூழ்கி உயிருக்குப் போராடிக்கொண்டிருந்த இளைஞர்கள் இருவர் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை உயிருடன் மீட்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் உல்ல கடல் பகுதியில் கடமைபுரிந்து வந்த அறுகம்குடா பொலிஸ் உயிர்காப்புப் பிரிவினரால் காப்பாற்றப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

மீட்கப்பட்டவர்கள் களுவாஞ்சிக்குடி பகுதியைச் சேர்ந்த 23 மற்றும் 26 வயதுடையவர்கள் என்றும் ஆரம்ப சிகிச்சை அளிக்கப்பட்டு உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு



# இஸ்ரேல் நடத்திய தாக்குதலால் காஸாவில் 115 பேர் உயிரிழப்பு!

காஸா, ஜூலை 22

**காஸாவில் இஸ்ரேல் இராணுவம் நடத்திய தாக்குதலில் 115 பேர் உயிரிழந்தனர். இதன் மூலம் பலி எண்ணிக்கை 58 ஆயிரத்து 895 ஆக அதிகரித்தது.**

காஸா முனையை நிர்வகித்து வரும் ஹமாஸ் அமைப்பினர் கடந்த 2023ஆம் ஆண்டு ஒக்ரோபர் 7ஆம் திகதி இஸ்ரேலுக்குள் நுழைந்து பயங்கரவாதத் தாக்குதல் நடத்தினர். இந்த் தாக்குதலில் 1139 இஸ்ரேலியர்கள் கொல்லப்பட்டனர். மேலும், இஸ்ரேலிலிருந்து 251 பேரை பணயக் கைதிகளாக காஸா முனைக்கு ஹமாஸ் அமைப்பினர் கடத்திச் சென்றனர்.

இதையடுத்து, ஹமாஸ் அமைப்பு மீது போர் அறிவித்த இஸ்ரேல் காஸா முனையில் அதிரடி தாக்குதல் நடத்தி வருகிறது. இதேவேளை, பணயக் கைதிகளில் பலரை ஒப்பந்த அடிப்படையிலும் இராணுவ நடவடிக்கை மூலமும் இஸ்ரேல் மீட்டுள்ளது.

பணயக் கைதிகளை மீட்கவும் ஹமாஸ் அமைப்பினரை முழுமையாக ஒழிக்கும் நோக்கிலும் காஸா முனையில் இஸ்ரேல் தொடர்ந்து தரைவழி, வான்வழித் தாக்குதலை நடத்தி வருகிறது.

இந்த நிலையில், காஸா முனையில் நேற்று முன்தினம் இஸ்ரேல் தரைவழி, வான்வழித் தாக்குதல் நடத்தியது. இந்தத் தாக்குதலில் 115 பேர் உயிரிழந்தனர். இதன் மூலம் இஸ்ரேல் - ஹமாஸ்இடையேயான போரில் காஸாவில் உயிரிழந்தோர் எண்ணிக்கை 58 ஆயிரத்து 895 ஆக அதிகரித்தது. (எ)

# இந்தோனேஷியாவில் கப்பலில் பயங்கர தீ!

## கடலில் குதித்து தப்பிய பயணிகள்

பாலி, ஜூலை 22

இந்தோனேஷியாவில் கப்பலில் பயங்கர தீ விபத்து ஏற்பட்டது. இதனால், கடலில் குதித்து பயணிகள் உயிர் தப்பினர்.

இந்தோனேஷியாவில் 280 பேருடன் சொகுசு கப்பல் ஒன்று வடக்கு சுலவேசியில் உள்ள தலாவுத் தீவிலிருந்து மனாடோ நகரை நோக்கிச் சென்று கொண்டிருந்தது. அப்போது எதிர்பாராத விதமாக திடீரென கப்பலில் தீ விபத்து ஏற்பட்டது. தீ கப்பலின் மற்றப் பகுதிகளுக்கு மளமளவெனப் பரவி கப்பல் முழுவதுமாக தீ பற்றி எரியத் தொடங்கியது.

தீயை கண்டு அதிர்ச்சியடைந்த பயணிகள் தப்பிக்க உடனடியாக கடலில் குதித்தனர். அவர்களில் பெரும்பாலானோர் பாதுகாப்பு அங்கி அணிந்திருந்தனர். ஆனால் சில பயணிகள் அதனை அணியாமல் கடலில் குதித்தனர். அருகிலுள்ள டெல்லிஸ் தீவைக் கடந்து செல்லும் பல மீன்பிடிப் படகுகள் சில பயணிகளை தண்ணீரிலிருந்து மீட்டு தங்கள் படகுகளில் கரைக்கு கொண்டு வந்தன. இதனையடுத்து கட லில் குதித்த பயணிகளை மீட் கும் பணி தீவிரமாக நடை பெற்று வருகிறது.

இந்த தீ விபத்தில் ஏதேனும் உயிரிழப்புகள் ஏற்பட்டிருக் கிறதா? என்பது குறித்தான தகவல்கள் இன்னும் வெளியாகவில்லை. (எ)

# பழனிச்சாமி பேச்சில் உள்நோக்கம் இல்லை

## நயினார் நாகேந்திரன் தெரிவிப்பு

நாகபட்டினம், ஜூலை 22

ஆட்சியில் பங்கு கொடுக்க நாங்கள் ஏமாளிகள் அல்ல என்று பழனிச்சாமி பேசியதில், எந்த உள்நோக்கமும் இல்லை என்று பா. ஜ. க. தமிழக மாநிலத் தலைவர் நயினார் நாகேந்திரன் தெரிவித்தார்.

நாகை மாவட்டம் உத்தம சோழபுரத்தில் வெட்டாற்றின் குறுக்கே கட்டப்படும் தடுப்பணை பணியை நிறுத்திவிட்டு, ஏற்கனவே அறிவித்த பூதங்குடி பகுதியில் தடுப்பணை கட்ட நடவடிக்கை எடுக்கக் கோரி பா. ஜ. க. சார்பில் வாஞ்சூரில் நேற்று முன்தினம் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

ஆர்ப்பாட்டத்துக்கு பின்னர் செய்தியாளர்களுக்கு நயினார் நாகேந்திரன் பேட்டியளித்த போது, ஆட்சியில் பங்கு கொடுக்க நாங்கள் ஏமாளிகள் அல்ல என்று அ.தி.மு.க. பொதுச் செயலாளர் பழனிச்சாமி பேசியது குறித்து செய்தியாளர்கள் கேட்டனர். அதற்கு "அ.தி.மு.கவை பா.ஜ.கவிடம் அடகு வைத்துவிட்டார்கள், பா.ஜ.கவினர் அ.தி.மு.கவை கபளீகரம் செய்துவிடுவார்கள் என தி.மு.கவினர் கூறியதற்கு தான், எதிர்க்கட்சித் தலைவர் அவ்வாறு பதிலளித்துள்ளார்.

அதில் எந்தவித உள்நோக்கமும் இல்லை.

தேசிய ஜனநா யக கூட்டணியின் ஆட்சி தமிழகத்தில் அமையும். எந்தக் கட்சியின் ஆட்சி அமையும் என்பதை அப்போது அறிந்து கொள்ளலாம். 2026 தேர்தலில் பா.ஜ.கவுக்கு எத்தனை இடங்கள் கிடைக்கும் என்பது குறித்து ஊடகங்கள் கவலைப்பட வேண்டாம்"- என்றார். (எ)

# 400 விமானங்கள் இரத்து

ஹொங்கொங், ஜூலை 22

ஹொங்கொங்கை தாக்கிய புயலால் 400 விமானங்கள் இரத்துச் செய்யப்பட்டன.

இதனால், 80 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பயணிகள் அவதியடைந்துள்ளனர்.

சீனாவின் தன்னாட்சி பெற்ற மாகாணமாக ஹொங்கொங் செயல்பட்டு வருகிறது.

இந்த நிலையில், தென்சீனக் கடல் பகுதியில் புயல் உருவானது.

அந்த புயல் நேற்று ஹொங்கொங்கை தாக்கியது.

ஹொங்கொங், சீனாவின் கவுங்டங் மாகாணத்தில் உள்ள நகரங்களையும் இந்தப் புயல் தாக்கியது.

இதில், நகரின் பல்வேறு பகுதிகளில் மரங்கள், மின் கம்பங்கள் சாய்ந்தன. புயல் காற்றுடன் கனமழையும் பெய்து வருகிறது.

இதனால் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், புயலால் ஹொங்கொங்கில் விமான சேவை பாதிக்கப்பட்டுள்ளது.

ஹொங்கொங்கில் 400இற்கும் மேற்பட்ட விமானங்கள் இரத்து செய்யப்பட்டுள்ளன.

இதனால், 80 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பயணிகள் அவதியடைந்துள்ளனர். (எ)

# தென்கொரியாவில் கனமழை, வெள்ளம்

## 14 பேர் உயிரிழப்பு



சியோல், ஜூலை 22

தென்கொரியாவில் கனமழை, வெள்ளத்தால் 14 பேர் உயிரிழந்தனர்.

கனமழையால் பல்வேறு பகுதிகளில் நிலச்சரிவு, வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது. இந்த நிலையில், அந்த நாட்டில் பெய்துவரும் கனமழை, வெள்ளம், நிலச்சரிவில் சிக்கி இதுவரை 14 பேர் உயிரிழந்தனர். மேலும், பலர் காயமடைந்துள்ளனர். இதேவேளை, கனமழை நீடித்து வரும் நிலையில் மீட்புப் பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. (எ)

# பிரம்மபுத்திரா நதியில் மிகப்பெரிய அணை

## கட்டுமான பணியை தொடங்கியது சீனா

பீஜிங், ஜூலை 22

பிரம்மபுத்திரா நதியில் மிகப்பெரிய அணை கட்டுமானப் பணியை சீனா தொடங்கியுள்ளது.

திபெத்தில் இந்திய எல்லையான அருணாச்சல பிரதேசத்துக்கு அருகே பிரம்மபுத்திரா நதியின் குறுக்கே அணை கட்ட சீனா நீண்ட காலமாகத் திட்டமிட்டு வந்தது. இதற்கு கடும் எதிர்ப்புகள் கிளம்பிய நிலையிலும் உலகின் மிகப் பெரிய அணையின் கட்டுமானப் பணிகள் நேற்று முன்தினம் தொடங்கியுள்ளன. தொடக்க விழா நியிங்ஜி நகரில் நடைபெற்றது. இதில் சீனப் பிரதமர் லி கியாங் கலந்து கொண்டு அடிக்கல் நாட்டினார். (எ)

# ரஷ்யாவுக்கு சுனாமி எச்சரிக்கை நிலநடுக்கங்களால் மக்கள் அதிர்ச்சி

மொஸ்கோ, ஜூலை 22

ரஷ்யாவின் கம்சட்கா தீபகற்பத்தின் கிழக்கு கடற்கரையில் நேற்று ஏற்பட்ட 7. 4 ரிக்டர் அளவிலான நிலநடுக்கத்தைத் தொடர்ந்து ரஷ்யாவின் சில பகுதிகளுக்கு சுனாமி எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக அமெரிக்க தேசிய சுனாமி எச்சரிக்கை மையம் தெரிவித்துள்ளது.

ரஷ்யாவின் பசிபிக் கடற்கரையில் 7. 4 ரிக்டர் அளவிலான நிலநடுக்கம் உட்பட மூன்று நிலநடுக்கங்கள் பதிவானதை அடுத்து சுனாமி எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (எ)

# மூன்றாவது பெரிய பொருளாதார நாடாக இந்தியா உருவெடுக்கும்

## அமைச்சர் அமித் ஷா உறுதி



டேராடூன், ஜூலை 22

2027ஆம் ஆண்டுக்குள் மூன்றாவது பெரிய பொருளாதார நாடாக இந்தியா உருவெடுக்கும் என்று மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா தெரிவித்தார்.

இந்தியாவின் உத்தராகாண்ட் மாநிலம் உத்தம்சிங் நகர் மாவட்டம் ருத்ராபூரில் முதலீட்டு திருவிழா நிகழ்ச்சி நடைபெற்றது.

கடந்த 2023ஆம் ஆண்டு கையெழுத்தான முதலீட்டு ஒப்பந்தங்களிலிருந்து இலங்கை மதிப்பில் சுமார் மூன்றரை இலட்சம் கோடிக்கான பணிகள் தொடங்கப்பட்டன. இந்த நிகழ்ச்சியில் அமித் ஷா கூறுகையில்,

உத்தரகாண்ட் மாநிலம் வளர்ச்சிப் பாதையில் செல்லும் போது, காங்கிரஸ் கட்சி எப்போதும் எதிர்மறை அரசியல் செய்து வருகிறது. இது, பாலில் எலுமிச்சையை பிழிந்து, அதன் சுவையை புளிப்பு ஆக்குவது போல் இருக்கிறது. காங்கிரஸ் ஆட்சிக்காலத்தில் 10 ஆண்டுகளில் உத்தரகாண்டுக்கு அளித்த நிதியை விட மோடி ஆட்சிக்காலத்தில் மூன்றரை மடங்கு அதிக நிதியுதவி அளிக்கப்பட்டுள்ளது.

வாஜ்பாய் ஆட்சியை விட்டு இறங்கியபோது, உலகில் பொருளாதாரத்தில் 11ஆவது இடத்தில் இருந்த இந்தியாவை 4ஆவது இடத்துக்கு மோடி முன்னேற்றியுள்ளார். 2027ஆம் ஆண்டுக்குள் 3ஆவது பெரிய பொருளாதார நாடாக இந்தியா உருவெடுக்கும் என அமித் ஷா மேலும் தெரிவித்தார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு



# 3 விக்கெட் வித்தியாசத்தில் அவுஸ்திரேலியா வெற்றி

கிங்ஸ்டன், ஜூலை 22

மேற்கு இந்திய தீவுகள் அணிக்கு எதிரான போட்டியில் 3 விக்கெட்கள் வித்தியாசத்தில் அவுஸ்திரேலிய அணி வெற்றி பெற்றது.

அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணி, மேற்கு இந்திய தீவுகளுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டு 3 போட்டிகள் கொண்ட ரி - 20 தொடரில் விளையாடி வருகிறது. இரு அணிகளுக்கும் இடையிலான முதலாவது போட்டி நேற்று நடைபெற்றது.

இதில் முதலில் துடுப்பெடுத்தாடிய மேற்கு இந்திய தீவுகள் அணி 20 ஓவர்களில் 8 விக்கெட்களை இழந்து 189 ஓட்டங்கள் எடுத்தது. அந்த அணி தரப்பில் அதிகபட்சமாக ரோஸ்டன் சேஸ் 60 ஓட்டங்கள் எடுத்தார். அவுஸ்திரேலியா தரப்பில் துவார்ஷியஸ் 4 விக்கெட்கள் வீழ்த்தினார்.

தொடர்ந்து 190 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் விளையாடிய அவுஸ்திரேலியா 18. 5 ஓவர்களில் 7 விக்கெட்களை இழந்து 190 ஓட்டங்கள் எடுத்து 3 விக்கெட்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. அந்த அணி தரப்பில் கேமருன் கிரீன் (51), மிட்செல் ஓவன் (50)



அரைச்சதம் அடித்து அசத்தினர். இந்த வெற்றியின் மூலம் 3 போட்டிகள் கொண்ட ரி - 20 தொடரில் 1 - 0 என அவுஸ்திரேலியா முன்னிலையில் உள்ளது. (எ)



## கனடா ஓபின் ரென்னிஸ்: முன்னணி வீரர்கள் விலகல்

ரொரன்டோ, ஜூலை 22

கனடா ஓபின் ரென்னிஸ் தொடரிலிருந்து முன்னணி வீரர்கள் விலகியுள்ளனர்.

முன்னணி வீரர், வீராங்கனைகள் பங்கேற்கும் கனடா ஓபின் சர்வதேச ரென்னிஸ் போட்டி ரொரன்டோ நகரில் அடுத்த வாரம் தொடங்குகிறது. இந்தத் தொடரில் பல முன்னணி வீரர்கள் கலந்து கொள்ளவுள்ளதால் ரென்னிஸ் ரசிகர்கள் இந்தத் தொடரை ஆவலுடன் எதிர்நோக்கியுள்ளனர்.

இந்த நிலையில், இந்தத் தொடரிலிருந்து நம்பர் 1 வீரரான இத்தாலியின் ஜன்னிக் சின்னெர், நம்பர் 5 வீரரான செர்பியாவின் நோவக் ஜோகோவிச் மற்றும் பிரிட்டனின் ஜாக் டிராபர் ஆகியோர் விலகியுள்ளதாக அறிவித்துள்ளனர்.

காயம் காரணமாக கனடா ஓபின் தொடரில் விளையாடவில்லை என இவர்கள் தெரிவித்துள்ளனர். முன்னணி வீரர்கள் விலகியுள்ளதால் ரசிகர்கள் வருத்தம் அடைந்துள்ளனர். (எ)

## 7 விக்கெட் வித்தியாசத்தில் பங்களாதேஷ் அணி வெற்றி

மிர்பூர், ஜூலை 22

பாகிஸ்தானுக்கு எதிரான போட்டியில் 7 விக்கெட்கள் வித்தியாசத்தில் பங்களாதேஷ் அணி அபார வெற்றி பெற்றது.


பங்களாதேஷ் - பாகிஸ்தான் இடையிலான 3 ஆட்டங்கள் கொண்ட ரி - 20 தொடரின் முதல் போட்டி மிர்பூரில் நடைபெற்றது. இதன்படி முதலில் துடுப்பாட்டம் செய்த பாகிஸ்தான் அணி 19. 3 ஓவர்கள் தாக்குப்பிடித்த நிலையில் 110 ஓட்டங்களுக்கு சுருண்டது. அதிகபட்சமாக பகர் ஜமான் 44 ஓட்டங்கள் அடித்தார். பங்களாதேஷ் தரப்பில் தஸ்கின் அகமது 3 விக்கெட்களும் முஸ்தபிசுர் ரஹ்மான் 2 விக்கெட்களும் வீழ்த்தினர்.

பின்னர் 111 ஓட்டங்கள் அடித்தால் வெற்றி என்ற இலக்கை நோக்கி களமிறங்கிய பங்களாதேஷ் அணிக்கு தொடக்க ஆட்டக்காரரான தன்சித் ஹசன் ஓர் ஓட்டத்திலும் அவரைத் தொடர்ந்து களமிறங்கிய லிட்டன் தாஸ் ஓர் ஓட்டத்திலும் ஆட்டமிழந்து ஏமாற்றினர். இதனையடுத்து ஜோடி சேர்ந்த பர்வேஸ் ஹொசைன் எமோன் - டோஹித் ஹிரிடோய் பொறுப்புடன் விளையாடி அணியை வெற்றிப் பாதைக்கு அழைத்துச் சென்றனர்.

இலக்கு குறைவானது என்பதால் இருவரும் நிதானமாகவும் அதே நேரத்தில் பொறுப்புடனும் விளையாடினர். பாகிஸ்தான் பந்துவீச்சை திறம்பட சமாளித்த இந்த ஜோடி இலக்கை நெருங்கும்போது பிரிந்தது. டோஹித் ஹிரிடோய் 36 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். இதனிடையே எமோன் அரைச்சதம் அடித்தார்.

இறுதியில் 15. 3 ஓவர்களில் 3 விக்கெட்களை மட்டுமே இழந்த பங்களாதேஷ் 112 ஓட்டங்கள் அடித்து 7 விக்கெட்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. எமோன் 56 ஓட்டங்களுடனும் ஜேக்கர் அலி 15 ஓட்டங்களுடனும் களத்தில் இருந்தனர். பாகிஸ்தான் தரப்பில் சல்மான் மிர்சா 2 விக்கெட்கள் வீழ்த்தினார். பர்வேஸ் ஹொசைன் எமோன் ஆட்டநாயகனாக தெரிவு செய்யப்பட்டார்.

இந்த வெற்றியின் மூலம் 3 போட்டிகள் கொண்ட ரி - 20 தொடரில் பங்களாதேஷ் 1 - 0 என்ற கணக்கில் முன்னிலை பெற்றுள்ளது. (எ)





## “எந்தவொரு வாய்ப்பும் வழங்கப்படவில்லை”

லண்டன், ஜூலை 22

எங்களது திட்டத்தை சிறப்பாக செயல்படுத்த எந்தவொரு வாய்ப்பும் அளிக்கவில்லை என்று இந்திய மகளிர் கிரிக்கெட் அணி தலைவி ஹர்மன்பிரீத் கவுர் தெரிவித்தார்.

இந்திய மகளிர் கிரிக்கெட் அணி, இங்கிலாந்தில் சுற்றுப்பயணம் செய்து விளையாடி வருகிறது.

இவ்விரு அணிகள் இடையிலான 2ஆவது ஒருநாள் கிரிக்கெட் போட்டி லண்டன் லோர்ட்ஸ் மைதானத்தில் நடைபெற்றது.

இந்தப் போட்டியில் இந்தியாவை வீழ்த்தி இங்கிலாந்து வெற்றி பெற்றது. தோல்வி குறித்து ஹர்மன்பிரீத் கவுர் அளித்த பேட்டியில் கூறியதாவது,

“நாங்கள் சிறப்பாக துடுப்பாட்டம் செய்யவில்லை. அது எங்களுக்கு பாதகத்தை ஏற்படுத்தியது. அவர்கள் எங்களது திட்டத்தை சிறப்பாக செயல்படுத்த எந்தவொரு வாய்ப்பும் அளிக்கவில்லை. எல்லா பாராட்டும் இங்கிலாந்து அணியினரையே சாரும். மேகமூட்டமான சூழ்நிலையால் துடுப்பாட்டம் செய்வது எளிதானதாக இருக்கவில்லை.

எங்களால் தொடக்கத்தில் விக்கெட் வீழ்த்தி அவர்களுக்கு நெருக்கடி கொடுக்க முடியவில்லை. இதிலிருந்து நிறைய கற்றுக்கொண்டோம்”- என்றார். (எ)



## சுவிஸ் ஓபின் ரென்னிஸ்: அலெக்சாண்டர் சம்பியன்

ஜிஸ்டாட், ஜூலை 22

சுவிஸ் ஓபின் ரென்னிஸ் தொடரில் அலெக்சாண்டர் பப்ளிக் சம்பியனானார்.

பல முன்னணி வீரர்கள் பங்கேற்றிருந்த சுவிஸ் ஓபின் சர்வதேச ரென்னிஸ் போட்டி சுவிட்சர்லாந்தில் உள்ள ஜிஸ்டாட் நகரில் நடைபெற்றது. இதில் ஆண்கள் ஒற்றையர் பிரிவில் சம்பியன் யார்? என்பதைத் தீர்மானிக்கும் இறுதிப்போட்டி நேற்று நடைபெற்றது. இதில் ஆர்ஜென்ரீனாவின் ஜூவான் மானுவல், கஜகஸ்தானின் அலெக்சாண்டர் பப்ளிக் ஆகியோர் மோதினர்.

இதில் முதல் 2 செற்களை ஆளுக்கொன்றாக கைப்பற்றிய நிலையில் 3ஆவது செற்றை அலெக்சாண்டர் பப்ளிக் கைப்பற்றி வெற்றி பெற்றார். அலெக்சாண்டர் பப்ளிக் இந்த ஆட்டத்தில் 6-4, 4-6 மற்றும் 6-3 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்று சம்பியன் பட்டம் வென்றார் என்பது குறிப்பிடத்தக்கது. (எ)

## முதல் ரி - 20 போட்டியில் அயர்லாந்து அணி வெற்றி

டப்ளின், ஜூலை 22

முதலாவது ரி - 20 போட்டியில் அயர்லாந்து அணி 6 விக்கெட்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

சிம்பாவே மகளிர் கிரிக்கெட் அணி, அயர்லாந்தில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 3 ரி - 20 மற்றும் 2 ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடி வருகிறது. இதில் முதலில் ரி - 20 போட்டிகள் நடைபெறுகின்றன. இதன்படி முதலாவது போட்டி டப்ளினில் நேற்று முன்தினம் நடைபெற்றது.




இந்த ஆட்டத்தில் முதலில் துடுப்பாட்டம் செய்த சிம்பாவே அணி 20 ஓவர்களில் 9 விக்கெட் களை இழந்து 117 ஓட்டங்கள் எடுத்தது. சிம்பாவே தரப்பில் சிப்போ முகேரி 42 ஓட்டங்கள் எடுத்தார். அயர்லாந்து தரப்பில் காரா முர்ரே 3 விக்கெட்கள் வீழ்த்தினார்.

தொடர்ந்து 118 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்கு டன் களமிறங்கிய அயர்லாந்து அணி, 16. 5 ஓவர்களில் 4 விக்கெட்களை மட்டும் இழந்து 118 ஓட்டங்கள் எடுத்து வெற்றி பெற்றது. அயர்லாந்து தரப்பில் கேபி லூயிஸ் 67 ஓட்டங்கள் எடுத்தார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சித்துப்பாத்தி...

அகழ்வாய்வுத் தளம் இரண்டில் 3 மனித எலும்புக்கூடுகளுமாக மொத்தமாக 7 மனித எலும்புக்கூடுகள் நேற்று பகுதியளவில் அடையாளம் காணப்பட்டுள்ளன.

சித்துபாத்தி மனிதப் புதைகுழியின் இரண்டாம் கட்ட அகழ்வுப் பணிகள் 16 ஆவது நாளாக யாழ்ப்பாண நீதிவான் நீதிமன்ற நீதிபதி ஏ.ஏ.ஆனந்தராஜாவின் முன்னிலையில், தொல்லியல் துறை பேராசிரியர் ராஜ்சோமதேவா, சட்ட வைத்திய அதிகாரி செல்லையா பிரணவன் ஆகியோரின் பங்கேற்போடு முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இதுவரை 65 மனித எலும்புக்கூடுகள் முழுமையாக அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

## யாழ்ப்பாணத்தில்...

என்றும் மக்களுக்கு அழைப்பு விடுத்துள்ளார்.

கொக்குவிலில் உள்ள தனது அலுவலகத்தில் நடத்திய ஊடக சந்திப்பில் அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நாளை அதாவது ஜூலை 23 என்பது தமிழ் மக்களுக்கு கறைபடிந்த ஒருநாள். இந்நாளின் வரலாற்றை மழுங்கடிக்க அநுர அரசு சதித் திட்டம் ஒன்றை மிக சாதுரியமாக நகர்த்த முயற்சிக்கின்றது.

அதாவது குறித்த தினத்தன்று தென்னிலங்கையில் இருந்து ஒரு தொகுதி நபர்களை யாழ்ப்பாணத்துக்கு அழைத்துவந்து இங்குள்ள அநுர அரசின் எடுபிடிகளைக் கொண்டு மக்களை ஏமாற்றி அழைத்து இனங்களுக்கிடையிலான நல்லிணக்கத்தை உருவாக்குவதாகக் கூறி நட்புறவுப் பாலம் என்ற நிகழ்வை நடத்த முயற்சிக்கின்றது.

இது தமிழர்கள் எல்லோரும் ஒன்றுபட்டு இலங்கையில் நடைபெற்ற யுத்தக் குற்றங்களுக்கு சர்வேச குற்றவியல் விசாரணையை மேற்கொள்ள முயற்சிக்கும் போது அதை சிதைப்பதற்கு அல்லது திசை திருப்பும் நகர்வாகவே இருக்கின்றது.

அநுர அரசின் இந்த சதியில் சிக்காது தமிழ் மக்கள் மிகவும் விழிப்பாக இருபது வேண்டியது அவசியமாகும்.

இந்த நட்புறவுக்கு கொண்டாட்டத்தை கொண்டாடுவதானது 1983 ஆம் ஆண்டு நடைபெற்ற பாரிய இனப்படுகொலையை மூடி மறைப்பதற்கான ஒரு தந்திரோபாயமாகவே இது இருக்கின்றது .

கடந்த காலங்ககில் இருந்த அரசுகள் எல்லாம் இந்த விடயத்துக்கு தீர்வை கொடுக்காவிட்டாலும் அதை இல்லாதொழிக்க முயற்சிக்கவில்லை. நினைவேந்தல்களை கண்டுகொள்ளாமல் இருந்தன.

ஆனால் அநுர அரசு அந்த அரசுகள் எதுவும் தீர்வு கொடுக்கவில்லை என்ற தோற்றத்தை மக்களுக்கு காண்பித்து இந்த விடயத்தை நீர்த்துப்போகச் செய்ய முழுமூச்சாக செயற்படுகின்றது.

குறிப்பாக குறித்த படுகொலைகளுக்கு தீர்வு கொடுப்பதில் தாம் உன்னிப்பாக இருப்பது என்பதை காட்டுவது போல ஒரு மாயை உருவாக்கி தமிழ் மக்களின் அழிவுகளை மூடி மறைக்க முயற்சிக்கிறது.

அது மட்டுமல்லாது சர்வேச விசாரணை அல்லது போர் குற்ற விசாரணை தேவையற்ற விடயம் என்பதை சர்வதேசத்துக்கு காட்டுவதற்கு முயற்சிக்கின்றது.

அந்த முயற்சிக்கான ஒரு நகர்வாகவே இந்த நட்புறவுக் கொண்டாட்டம் மேற்கொள்வதாக தெரிகின்றது. இது அநுர அரசின் ஒரு சதித்திட்டமாகவே இருக்கின்றது.

ஆகவே, நாளை தென்னிலங்கையிலிருந்து வரவுள்ளவர்களுடன் இங்குள்ள அநுர அரசின் எடுபிடிகளின் முயற்சிக்கு எமது மக்கள் உடன் போகக்கூடாது. அன்றைய நாளை கறைபடிந்த நாளாக நாம் அனைவரும் கதுப்புக்கொடி கட்டி துக்கத்தையும் எதிர்ப்பையும் வெளிப்படுத்துவோம் - என்றார். (அ)

## வடக்கு...

சங்கத்தினர் மற்றும் சமூக மட்ட அமைப்புகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

இது தொடர்பில் கருத்து தெரிவித்த யாழ். மாவட்ட அரசாங்க அதிபர், யாழ்ப்பாணம் மாவட்டத்தில் உயர் பாதுகாப்பு வலயத்திலுள்ள காணிகளை விடுவிப்பது தொடர்பில் ஜனாதிபதி உள்ளிட்டோருக்கு தான் முன்னுரிமைப் படுத்தி விடுவிக்கப்படாத காணிகள் தொடர்பான விவரங்களை கையளித்துள்ளதாக குறிப்பிட்டார்.

இனிவரும் காலங்களில் ஜனாதிபதி ஊடாக குறித்த விவரங்கள் வழங்கப்பட்டு அவற்றை விடுவிப்பதற்கான நடவடிக்கைகளுக்காக முன்னெடுக்கப்படும் என அவர் தெரிவித்தார். (அ)

## அவுஸ்திரே...

பேரணி நடத்தியுள்ளன.

இந்தப் பேரணியில் பெருமளவு தமிழர்கள் கலந்து கொண்டனர். இலங்கை தூதரகத்துக்கு வெளியே தொடங்கிய பேரணி அவுஸ்திரேலியாவில் உள்ள ஐக்கிய நாடுகள் சபை அலுவலகங்கள் உட்பட முக்கிய தூதரகங்கள் நோக்கி நடைபெற்றது.

தமிழ் மக்களினதும் சர்வதேச சமூகத்தினரதும் தொடர்ச்சியான அழுத்தம் மூலமே இதுவரை பல எலும்புக்கூடுகள் மீட்கப்பட்டுள்ளன. இதுபற்றிய கவன வீர்ப்பு நிகழ்வு அணையா விளக்கு போராட்டமாக தாயகத்தில் மக்காளால் மேற்கொள்ளப்பட்டிருந்தமை கவனிக்கத்தக்கது.

அதன் தொடர்ச்சியாகவே நேற்று திங்கட்கிழமை சர்வதேச கவனவீர்ப்புப் பேரணியாக ஆஸ்திரேலியாவில் இயங்கும் அனைத்து தமிழ் அமைப்புகளும் இணைந்து தலைநகர் கன்பராவில் ஐக்கிய நாடுகள் சபையின் அலுவலகம் முன்பாக ஆரம்பமாகி நடைபெற்றது.

இப்பேரணியானது மதியம் 12 மணிக்கு இலங்கைத் தூதரகத்துக்கு முன்பாக பாரிய கவனவீர்ப்பு போரட்டத்துடன், ஆரம்பித்து, பன்னாட்டு தூதரகங்கள் மற்றும் ஐ.நா. தூதரகம் வழியாக சென்று அவுஸ்திரேலிய வெளிவிவகாரத்துறை அமைச்சு அலுவலகத்தில் முக்கிய கோரிக்கைகள் அடங்கிய மனு கையளிக்கப்பட்டது. (அ)

## ஷானியை...

இலங்கை கத்தோலிக்க திருச்சபையின் மக்கள் தொடர்பு இயக்குநர் அருட்தந்தை ஜூட் கிரிசாந்த பெர்ணான்டோ கொழும்பில் நேற்று முன் தினம் நடந்த ஊடக சந்திப்பின்போது,

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் பொலிஸ்சேவையிலிருந்து நீக்கப்பட்டுள்ள பிரதிபொலிஸ்மா அதிபர் நிலந்த ஜயவர்தனவுக்கு எதிராக வழக்கு தொடுக்கப்பட வேண்டும். அவருக்கு மரண தண்டனை வழங்கப்பட்டால்கூட பரவாயில்லை என கருத்து வெளியிட்டிருந்தார்.

இந்நிலையிலேயே இக்கூற்று அருட்தந்தை ஜூட்டின் தனிப்பட்ட கருத்தாகும் என சிறில் காமினி பெர்ணாண்டோ தெரிவித்தார்.

இலங்கை கத்தோலிக்க திருச்சபையும்,உலகளாவிய திருச்சபையும் மரண தண்டனையை ஏற்றுக்கொள்வதில்லை எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

அத்துடன், நிலந்த ஜெயவர்தன தொடர்பில் ஜனாதிபதி ஆணைக்குழு முன்வைத்த அனைத்து பரிந்துரைகளும் நடைமுறைப்படுத்தவேண்டும் என நாங்கள் எதிர்பார்க்கின்றோம் எனவும் அவர் குறிப்பிட்டார்.

அதேவேளை, சி.ஐடியின் இயக்குநராக ஷானி அபயசேகரவையும்,பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளராக ரவி செனிவிரட்னவையும் நியமிக்குமாறு ஜனாதிபதியிடம் , பேராயர் கோரிக்கை விடுத்தார் என வெளியாகும் தகவல்களையும் அவர் நிராகரித்துள்ளார். (அ)

## ஊசி மூலம்...

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு கொண்டு சென்றனர். இருப்பினும் அவர் ஏற்கனவே உயிரிழந்துவிட்டாரென மருத்துவர்கள் தெரிவித்தனர்.

அவரது சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். (அ)

## அரச வருவாய்...

ரூபாயாக இருந்ததாக இலங்கை மத்திய வங்கி குறிப்பிட்டுள்ளது.

இந்த அதிகரிப்பு பெரும்பாலும் அதிக வரி வசூல் காரணமாகும். வரி வருவாய் 20.87 வீதம் அதிகரித்து ரூ. 1,802.48 பில்லியனாக உயர்ந்துள்ளது. இது ஒரு வருடத்திற்கு முன்பு ரூ. 1,491.25 பில்லியனாக இருந்தது.

இந்த புள்ளிவிவரங்கள் மத்திய வங்கியின் அண்மைய வாராந்த பொருளாதார குறிகாட்டிகள் அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## மாகாண சபை...

இது குறித்து தேர்தல்கள் ஆணைக்குழுவின் உயரதிகாரி ஒருவரைத் தொடர்பு கொண்டு வினவியபோது-

இதற்குப் பதிலளித்த அவர், தேர்தல்கள் ஆணைக்குழு மாகாண சபை தேர்தலை நடத்துவதற்குத் தயாராகவே இருப்பதாகக் குறிப்பிட்டார்.

எனினும், சட்டச் சிக்கல்கள் தடையாக உள்ள நிலையில் அதனை பாராளுமன்றத்தினூடாக நிவர்த்திப்பதாக அரசாங்கமும் உறுதியளித்துள்ளது.

இந்த சூழ்நிலையில், தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் குறித்த கருத்தை வெளியிட்டிருப்பார் என, தாம் நம்பவில்லை என அந்த உயரதிகாரி குறிப்பிட்டார். அத்துடன், ஆணைக்குழுவின் தலைவரைத் இது தொடர்பில் நேற்றுக் காலை தொடர்பு கொண்டு கேட்ட போது, தாம் தேர்தல்கள் நடத்தப்படாது என்ற கருத்தை வெளியிடவில்லை என்றும், தவறாகப் பகிரப்படும் இந்த செய்திக்கான மறுப்பைத் தாம் ஊடகங்களுக்கு வெளியிடவுள்ளதாகவும் அவர் தெரிவித்ததாக குறித்த உயரதிகாரி கூறினார்.

தேர்தல்கள் ஆணைக்குழு என்ற வகையில் தாம் தேர்தலை நடத்துவதற்கான அழுத்தத்தைத் தொடர்ந்தும் அரசாங்கத்துக்கு வழங்கி வருவதாகவும் அவர் தெரிவித்தார். (அ)

## டொனால்ட்...

போராட்டக்காரர் ஒருவர்,

1948 முதல் அடுத்தடுத்து வந்த சிங்கள ஆட்சியாளர்களால் எடுத்த அனைத்து நடவடிக்கைகளும் பாகுபாடு, நில அபகரிப்புகள், காணாமல் ஆக்குதல், கொலைகள் என்ற வரையறைக்குள் மாத்திரமே செயல்பட்டது.

அந்தவகையில் பல உலகத் தலைவர்கள் வந்து போய்விட்டனர். ஆனால், இன்று ஒரே ஒரு தலைவருக்கு மட்டுமே செயல்பட தைரியமும் தெளிவும் உள்ளது.

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் பேசும்போது உலகம் அதை கேட்கிறது, சிலர் மரியாதைக்காகவும், மற்றவர்கள் பயத்திற்காகவும் அதனை கேட்கின்றனர்.

ஜனாதிபதி ட்ரம்பிடமிருந்து ஒரு தொலைபேசி அழைப்பு வந்தால் தமிழர்களுக்கு நீதியை மீட்டெடுக்க முடியும் என்று நாங்கள் நம்புகின்றோம்.

தமிழ் இறையாண்மையை மீட்டெடுக்க அவர் எங்களுடன் நின்றால், உலகெங்கிலும் உள்ள தமிழ் தாய்மார்கள் மற்றும் புலம்பெயர்ந்தோர், அவரை நோபல் அமைதி பரிசுக்கு பரிந்துரைக்கும் வண்ணம் ஐந்து மில்லியன் கையெழுத்துக்களை சேகரிப்போம் என உறுதியளிக்கிறோம். உலகம் ஒருபோதும் எதிர்பார்க்காத அமைதித் தூதராக ட்ரம்ப் மாறட்டும் - என்றார். (அ)

## நாணய நிதிய...

வாய்ப்புகளைப் பெறுவதன் மூலமும் இலங்கையை சர்வதேச மட்டத்துக்குக் கொண்டுசெல்லும் திட்டம் துரிதப்படுத்தப்படும் என ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

இலங்கை எதிர்கொள்ளும், தற்போதைய பொருளாதார சவால்கள் குறித்து விளக்கிய ஜனாதிபதி, அந்த சவால்களுக்கு மத்தியிலும், எதிர்வரும் 2026 வரவு-செலவுத் திட்டத்தில் நாட்டு மக்களுக்குத் தேவையான நிவாரணங்களை வழங்கவேண்டும் என அவர் நினைவு கூர்ந்தார்.

நாட்டில் முதலீட்டுக்கு ஏற்ற சூழலை உருவாக்குவதன் மூலம், முதலீட்டாளர்களை ஈர்க்கும் வகையில், சுங்கவரிச் சலுகைகள் உள்ளிட்ட வசதிகளை வழங்குவது குறித்து கலந்துரையாடப்பட்டதுடன், இலங்கை பொருளாதாரத்தின் ஸ்திரத்தன்மை மற்றும் தொடர்ச்சியைப் பேணுவதற்கு, சர்வதேச நாணய நிதியத்தின் ஆதரவு, இலங்கைக்கு தொடர்ந்து கிடைக்கும் வேண்டும் என ஜனாதிபதி வலியுறுத்தினார்.

சர்வதேச நாணய நிதியம், இதுவரை இலங்கைக்கு வழங்கிய ஆதரவுக்கு நன்றி தெரிவித்த ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க, நாட்டுக்குக் கிடைக்கும் பொருளாதார வளர்ச்சியின் அனைத்து பயன்களையும், மக்களுக்கு வழங்க நடவடிக்கை எடுப்பதாக தெரிவித்தார்.

இலங்கையை பொருளாதார ரீதியாக முன்னோக்கிக் கொண்டு செல்வதில், ஜனாதிபதி தலைமையிலான அரசாங்கம் மேற்கொண்ட உறுதிப்பாட்டை பாராட்டிய சர்வதேச நாணய நிதிய பிரதிநிதிகள், பொருளாதாரத்தின் ஸ்திரத்தன்மையைப் பேணுவதற்கும், இலங்கையை உலகளவில் முன்னோக்கி கொண்டு செல்வதற்கும் தேவையான ஆதரவை வழங்குவதாக தெரிவித்தனர். (அ)

## குருக்கள்மடம்...

எனினும் நேற்று இந்த வழக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது சட்டமா அதிபரை பிரதிநிதித்துவப்படுத்தி எவரும் ஆஜராகி இருக்கவில்லை. எனினும் காணாமற்போன ஆட்கள் பற்றிய அலுவலகத்திலிருந்து இரண்டு சட்டத்தரணிகள் ஆஜாராகி சமர்ப்பணங்களை முன் வைத்தனர்.

அவர்கள் களுவாஞ்சிகுடி நீதமன்றத்துக்கு காணாமற்போனோர் அலுவலகத்தினால் ஒரு விரிவான கடிதத்தினை ஏற்கனவே அனுப்பியிருந்ததாகவும் குருக்கள்மடம் மனிதப் புதைகுழி தோண்ட வேண்டும் என்ற நிலைப்பாட்டிலேயே இருப்பதாகவும் அதே நிலைப்பாட்டியிலேயே தற்போதும் இருப்பதாகவும் கூறினார்கள்.

இவற்றை செவிமடுத்த நீதிபதி ஏற்கனவே திட்ட வரைவு ஒன்று சட்ட வைத்திய அதிகாரியால் நீதிமன்றத்துக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

அது 2020ஆம் ஆண்டு சமர்பிக்கப்பட்டதால் கால மாற்றத்தினால் அதை மீளாய்வு செய்து மீள அந்த திட்ட வரைவை நீதிமன்றத்துக்கு அடுத்த தவனையின்போது சமர்ப்பிக்குமாறு சட்ட வைத்திய அதிகாரிக்கு நீதவான் கட்டளையிட்டார்.

அத்துடன் அடுத்த தவணையான ஒகஸ்ட் 25ஆம் திகதிக்கு சட்டமா அதிபரை ஆஜராகுமாறும் கட்டளையிட்ட நீதவான் அன்றைய தினத்துக்கு இந்த வழக்கை ஒத்திவைத்தார்.

குறித்த இவ் வழக்கில் முறைப்பாட்டாளரான அப்துல் மஜீத் அப்துர் ரவூப் நீதிமன்றத்தில் பிரசன்னமாகி இருந்ததுடன் அவரின் சார்பில் குரல்கள் இயக்கத்தின் சட்டத்தரணிகள் நீதிமன்றத்தில் ஆஜராகி இருந்தனர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

## ஓய்வூதியம் கேட்டு ஜெனீவா செல்லும் முன்னாள் எம்.பிக்கள்

கொழும்பு, ஜூலை 22

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களின் ஓய்வூதியம் இரத்து செய்வதை எதிர்த்து ஓய்வு பெற்ற பாராளுமன்ற உறுப்பினர்கள் சங்கம், ஜெனீவா மனித உரிமைகள் ஆணைக்குழு மற்றும் பாராளுமன்றங்களுக்கு இடையேயான ஒன்றியத்தில் முறைப்பாடு செய்ய முடிவு எடுத்துள்ளது.

இது தொடர்பாக அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ள சங்கத்தின் செயலாளர் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பிரேமசிறி மானகே-முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களின் ஓய்வூதி யத்தை இரத்து செய்ய அமைச்சரவை ஏற்கனவே முடிவு எடுத்துள்ளது. இது மிகவும் நியாயமற்ற முடிவு என்று கூறி தங்கள் மருந்துகளைப் பெற ஓய்வூதியம் வரும் வரை காத்திருக்கும் வயதான பாராளுமன்ற உறுப் பினர்கள் பலர் இந்த முடிவால் பெரும் சிக்கலில் சிக்கு வார்கள்-என்று சுட்டிக்காட்டினார்.

ஒரு குடும்பத்தின் அடிப்படைத் தேவைகளைக் கூட ஓய்வூதியத்தால் பூர்த்தி செய்ய முடியாத சூழ்நிலையில் ஓய்வூதியத்தை இரத்து செய்வதால் ஏற்படும் சூழ்நிலையை பரிசீலிக்குமாறும் அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளார். (அ)

## இறக்குமதி வரிக்குறைப்பு விவாதம் இறுதிக்கட்டத்தில்

### திட்டங்கள் குறித்து விரிவாக ஆராய்வு

கொழும்பு, ஜூலை 22

அமெரிக்காவுக்கும் இலங்கைக்கும் இடையிலான இறக்குமதி வரிக்குறைப்பு தொடர்பான விவாதம் இறுதிக் கட்டத்தை எட்டியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.



அண்மையில், இந்த விடயம் தொடர்பில் மெய்நிகர் சந்திப்பொன்றும் நடைபெற்றது.

இதன்போது, விரிவான திட்டங்கள் குறித்து ஆராய்ந்ததாகத் தொழில் அமைச்சரும் பொருளாதார மேம்பாட்டுப் பிரதி அமைச்சருமான அனில்ஜயந்த பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

இலங்கை தற்போது அமெரிக்காவுக்கான ஏற்றுமதி வரிகளை 30 சதவீதமாகக் குறைக்க முடிந்துள்ளது.

எனினும், அதனை மேலும் குறைப்பதற்காக, அமெரிக்க நலன்களுக்கு இடமளித்து, வர்த்தக இடைவெளியைக் குறைக்க இலங் கையும் சில சமரசங்களைச் செய்ய வேண்டியுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.

அமெரிக்க பொருட்களுக்கான சுங்க வரிகளை நீக்குதல், இலங்கைக்கான இறக்குமதிகள் மற்றும் முதலீடுகளை மேலும் அதிகரிப்பதற்கான வழிகள் குறித்து இதுவரை ஆராயப்பட்டுள்ளதாக அமைச்சர் கூறினார்.

இந்த விடயத்தில், சீனாவுக்கு எதிராக அமெரிக்கா சில கட்டுப்பாட்டு நடவடிக்கைகளைக் கோருகிறதா? என்ற கேள்விக்குப் பதிலளித்த அமைச்சர் அனில் ஜயந்த, இந்த உலகில் உள்ள ஒவ்வொரு நாட்டுக்கும் இறையாண்மை உள்ளது. எந்த நாடும் அதனை சமரசம் செய்யமுடியாது என்றும் குறிப்பிட்டார். (அ)

## ஒக்ரோபர் மாதம் இலங்கையர் தினம்

கொழும்பு, ஜூலை 22

நல்லிணக்கத்தை பிரதான இலக்காகக்கொண்ட இலங்கையர் தினம் எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் நடைபெறவுள்ளது எனவும் இதற்கான ஆரம்பக்கட்ட பேச்சுகள் நிறைவடைந்துள்ளன எனவும் புத்த சாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் ஹினிதும சுனில் செனவி தெரிவித்தார்.

ஊடகமொன்றுக்கு வழங்கிய நேர்காணலின்போதே அவர் இந்த தகவலை வெளியிட்டார்.

இனம், மதம், குல பேதங்கள் இன்றி இலங்கையராக இவ்விழாவை நாம் கொண்டாட முடியும். இலங்கையில் முதன்முறையாக எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் இது நடைபெறும்.

தலைநகரில் நான்கு வலயங்கள் பிரிக்கப்பட்டு, விழாவை எப்படி நடத்துவது, வடக்கு, கிழக்கு மற்றும் வெளிநாடுகளில் இருந்து இதற்கு பெறக்கூடிய தொடர்பு, போக்குவரத்து உட்பட எல்லாவித காரணங்கள் பற்றியும் பேசப்பட்டுள்ளன என அவர் கூறினார். (அ)

## கட்சியையும் சஜித்தையும் பலவீனப்படுத்த சதி முயற்சி

### முஜிபுர் ரஹ்மான் குற்றச்சாட்டு



கொழும்பு, ஜூலை 22

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவை மாற்றுவதற்கான உள் நடவடிக்கை குறித்த வதந்திகளை ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் நிராகரித்தார். அதே நேரத்தில் கட்சியையும் அதன் தலைவரையும் அரசியல் ரீதியாக பலவீனப்படுத்தவேண்டுமென்றே சதி நடப்பதாகவும் அவர் கூறினார்.

"சஜித் பிரேமதாஸவை எதிர்க்கட்சித் தலைவர் பதவியில் இருந்து நீக்குவது குறித்து கட்சிக்குள் எந்த கலந்துரையாடலும் நடக்கவில்லை என்று முஜிபுர் ரஹ்மான் கூறினார்.

இருப்பினும், எங்கள் கட்சியையும் அதன் தலைவரையும் அரசியல் ரீதியாக அழிக்க சில கூறுகள் செயல்படுகின்றன.

இந்தக் கூறுகள் அரசாங்கத்தின் மறைமுக ஆதரவுடன் செயல்படுவதாகத் தெரிகிறது என்று அவர் குற்றம் சாட்டினார்.

புதிய கூட்டணிக்குள் தயாசிறி ஜயசேகர போன்ற அனுபவம் வாய்ந்த அரசியல்வாதிகளைக் கொண்டுவருவது ஒரு நேர்மறையான நடவடிக்கையாக இருக்கும் என்று அவர் குறிப்பிட்டார்.

தயாசிறி ஒரு திறமையான மற்றும் அனுபவம் வாய்ந்த அரசியல்வாதி. அவரைப் போன்றவர்களை கட்சிக்குள் வரவேற்பது கட்சியை பலப்படுத்தும் என்று அவர் மேலும் கூறினார். (அ)

## இலங்கை மீது சர்வதேச அழுத்தத்தை கொடுக்கும் செயல்வடிவம் வேண்டும்

### கஜேந்திரகுமார் பொன்னம்பலம் வலியுறுத்து

கொழும்பு, ஜூலை 22

ஜெனிவா கூட்டத்துக்கு முன்னர் பாதிக்கப்பட்ட தரப்பினரின் கோரிக்கைகளை முன் வைப்பதன் ஊடாக கடுமையான சர்வதேச அழுத்தத்தை கொடுக்கும் செயல் வடிவத்தை ஏற்படுத்துவதே எமது நோக்கம் என தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர், பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் உள்ள தனியார் விருந்தினர் விடுதியில் நேற்று முன் தினம் ஞாயிற்றுக் கிழமை இடம்பெற்ற கலந்துரையாடல் தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

தமிழினப் படுகொலைக்கு பொறுப்பு கூற வைப்பது தொடர்பாக ஒரு நிலைப்பாட்டுக்கு தமிழ் அரசியல் கட்சிகள் , பொது அமைப்புகள் மனிதவுரிமை செயற்பாட்டாளர்கள், சிவில் சமூக செயற்பாட்டாளர்கள் உள்ளிட்ட தரப்பினருக்கு கலந்துரையாடலுக்கு அழைப்பு விடுத்தோம்.

நாம் அழைப்பு விடுத்தவர்களில் தமிழரசுக் கட்சியினர் சமூகமளிக்கவில்லை. ஏனைய கட்சியில் இருந்து அவற்றின் பிரதிநிதிகள், மனிதவுரிமை செயற்பாட்டாளர்கள் , சிவில் சமூகத்தினர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இனப் படுகொலைக்கு பொறுப்பு கூற வைத்தல் என்பது ஜெனீவாவுடன் முடக்கப்பட்டு விட கூடாது. பாதிக்கப்பட்ட மக்கள் தொடர்ந்து ஏமாற்றப்பட்டு வருகின்றனர். அதனை அவ்வாறே விட்டு விட முடியாது.

சாட்சியங்களை இழந்து வருகிறோம். இந்த நிலைமை தொடருமாயின் பொறுப்புக்கூறல் முற்று முழுதாக இல்லாமல் போகும் அபாயம் உண்டு.

அதேவேளை ஐநா அலுவலகம் இந்த அரசாங்கத்திற்கு அங்கீகாரத்தை தேடிக்கொடுக்கும் வகையில் செயற்பட்டு வருகிறது என்ற பரவலான குற்றச்சாட்டு மக்கள் மத்தியில் உள்ளது.

அதேவேளை ஐ. நாவை பலவீனப்படுத்தும் செயற்பாட்டிலும், பொறுப்பு கூறல் செயற்பாட்டை முடக்கவும் இந்த அரசாங்கம் புதிய யுக்திகளை கையாளுகின்றது.

அதற்கு தெரிந்தோ தெரியாமலோ , தமிழரசுக் கட்சியும் துணை போகின்றது. அதற்கு செம்மணி மனித புதைகுழி தொடர்பில் தமிழரசுக் கட்சி அனுப்பிய கடிதத்தை கூறலாம்.

இது தொடர்பில் ஐ.நா. மனித உரிமை ஆணைக்குழு மற்றும் மனித உரிமை ஆணையாளர் அலுவலகம் என்பவற்றில் முறைப்பாடுகளை கையளிக்க உள்ளோம்.

இந்த கூட்டத்தில் கடந்த 2021 ஆம் ஆண்டு அனைத்து கட்சிகள் , மனிதவுரிமை செயற்பாட்டாளர்கள், சிவில் சமூகத்தினர் உள்ளிட்டவர்களின் பங்களிப்புடன் தயாரிக்கப்பட்ட கடிதத்தில் இருந்து, அதன் முக்கியமான உள்ளடக்கங்களை பெற்று , தற்போதைய கால சூழலுக்கான கோரிக்கைகளையும் உள்ளடக்கி புதிய கடிதத்தை தயாரிக்கவுள்ளோம்.

அதன் மூலம் தமிழ் மக்களின் உண்மையான கோரிக்கை இவை தான் என கூறுவது மாத்திரமின்றி அதற்கு செயல் வடிவத்தை கொடுக்க விழிப்புணர்வு நடவடிக்கைகளை முன்னெடுப்பதுடன், மக்களை அணி திரட்டல் செயற்பாடுகளையும் செய்யவுள்ளோம்

புதிதாக நாம் எழுதவுள்ள கடிதம் வெளிவந்த பின்னர் அக்கடிதத்தின் உள்ளடக்கத்தை பார்த்த பின் , இது வரையில் எம்முடன் இணையாதவர்கள் இணைந்து கொள்ள முடியும்-என்றார். (அ)

## அமெ. இலங்கை மீது விதித்துள்ள உண்மையான வரி 58 வீதமாகும்!

கொழும்பு, ஜூலை 22

இலங்கையின் ஆடைப் பொருட்கள் உட்பட ஏற்றுமதிகளுக்கு அமெரிக்கா விதித்துள்ள உண்மையான வரி 58 வீதம் என்று இலங்கை ஐக்கிய வணிகர் சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

அமெரிக்கா விதித்துள்ள சமீபத்திய பரஸ்பர வரி மற்றும் பிற அனைத்து வரிகளும் சேர்ந்து 45 வீதம் முதல் 58 வீதம் வரை அதிகமாக உள்ளது என்றும் அது சுட்டிக் காட்டியுள்ளது.

இலங்கை ஏற்றுமதிகளுக்கு இவ்வளவு அதிக வரி விகதம் விதிக்கப்பட்டபோதிலும், அமெரிக் காவிலிருந்து இலங்கைக்கு இறக்குமதி செய்யப்படும் பொருட்களுக்கு அதிகபட்சமாக 17 வீத வரி மட்டுமே விதிக்கப்படுகிறது என்றும் அது தெரிவித்துள்ளது.

எனவே, உள்ளூர் வணிகங்களைப் பாதுகாக்க அமெரிக்காவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் பொருட்கள் மீதான வரியை 37 வீதமாக அதிகரிக்க வேண்டும் என்று சங்கம் கருதுகிறது. (அ)

## விடத்தல்தீவு இளைஞருக்கு ஐரோப்பாவில் விமானி உரிமம்

மன்னார், ஜூலை 22

மன்னார் - விடத்தல்தீவு கிராமத்தைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் ஐரோப்பாவில் விமானி உரிமத்தைப் பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விடத்தல்தீவைச் சேர்ந்த அனுஜன் என்ற இளைஞரே ஐரோப்பாவில் விமானி உரிமத்தைப் பெற்றுள்ளார்.

அனுஜன், தமது ஆரம்ப கல்வியை மன்னார் லூயிஸ் முன்பள்ளியிலும், தொடர்ந்து தரம் ஒன்று முதல் 3 வரை புனித சவேரியார் ஆண்கள் கல்லூரியிலும் கற்றார்.

இந்தநிலையில், ஒரு விமானத்தில் தலைமை விமானியாக செயற்படக்கூடிய அதிக திறன் கொண்ட உரிமத்தை அனுஜன் பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 22.07.2025 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org